
ISSN 1800-3109

# நங்கை

இதழ் 38/ 2013



மனித உரிமைகளுக்காக இறுதி வரை
போராடிய சுனிலா அபேயசேகர
அவர்களின் நினைவாக.....

Nangai Women's journal

தலைப்பு : நங்கை - இதழ் - 2013/38

ஆசிரியர் : சரோஜா சிவச்சந்திரன் M.A

ஆசிரியர் குழு : எம்.தேவகௌரி, விரிவுரையாளர், ஊடக கல்விநிலையம்,கொழும்பு.

: கே.எஸ். சிவகுமாரன், எழுத்தாளர் / விமர்சகர்.

வெளியீடு : மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல. 07, இரத்தினம் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

விலை :

| உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | : ரூபா 50.00 | தனிப்பிரதி | : ரூபா 60.00 |
| ஆண்டுச் சந்தா | : ரூபா 600.00 | ஆண்டுச் சந்தா | : ரூபா 720.00 |
| (தபாற்செலவு உட்பட) | | (தபாற்செலவு உட்பட) | |

**Title : Nangai - Issue - 2013 / 38**

**Editor : Saroja Sivachandran, B.A Hons Cey, M.A.Jaf.**

**Editorial Board: Ms.M.Devagowry, Lecturer, College of Journalism, Colombo.**

**: Mr.K.S. Sivakumaran, Writer / Critic**

**Publishers : Centre for Woman and Development,**
**No.07, Ratnam Lane, Off.K.K.S. Road,**
**Jaffna, SriLanka.**
**Phone : 021 222 4398**

**Printed by : Theepam Printers,**
**717, K.K.S. Road, Jaffna.**

**ISSN : 1800 - 3109**

**ISSN : 977-180-03100-0-2**

# நங்கை

இதழ் 38/ 2013

மகளிர் அபிவிருத்தி நிலையம்
யாழ்ப்பாணம்.

**Certre for Women and Development**
**Jaffna.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | ii |
| 2. | தேர்தலில் பெண் வேட்பாளர்களை நியமிப்பதில் கட்சிகள் தயக்கம் காட்டுகின்றனவா? | 01 |
| 3. | மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் | 04 |
| 4. | உடைந்த உள்ளம் உன்னத இல்லம் | 09 |
| 5. | மரத்துப்போன மனங்கள்....... | 13 |
| 6. | மரணமா விடை? | 17 |
| 7. | பெண் என்பதால் | 20 |
| 8. | அன்னையவள் | 21 |
| 9. | பாசத்தின் படலம் | 22 |
| 10. | காற்றில் உடைந்த இசைப்பறவை | 23 |
| 11. | பேசாப் பொருள் பேசும் பொருளாகியது | 24 |
| 12. | மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகள் | 26 |
| 13. | மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வெளியீடுகள் ~ 2013 | 34 |

# முகவுரை

வட மாகாணசபைக்கான தேர்தல் 2013 செப்ரம்பர் மாதம் இடம் பெறவுள்ளது . தேர்தல் கால ஆரவாரங்களோடு நங்கை 38ஆவது இதழாக வெளிவருகின்றது. அரசியலோடு இணைந்த சமூக மாற்றங்களை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பல வாய்ப்புக்களை வடமாகண சபையின் செயற்பாடுகளினூடாக பயனடைய முடியும். என்ற எதிர்பார்ப்புக்கள் எமக்குண்டு. போரின் வடுக்களை சுமந்து நிற்கும் பெண்களின் வாழ்வாதார நிலை உயர்வதோடு, அவர்களை வலிதாக்க வேண்டிய பொறுப்பும் எமக்குண்டு. சமூகத்தின் பொறுப்புக்கள் சீர்குலைந்து சிறுவர் முதல் முதியவர் வரை கரை காணாத பிரச்சனைகளை தினமும் தாங்கி நிற்கின்றனர். யார் யாரை நெறிப்படுத்தப் போகின்றோம் என்பதில் தெளிவில்லை. இளைஞர் முதியோரையும், முதியோர் இளைஞரையும் மாறிமாறி குறை கூறுகின்றனர். யாரும் யார் சொல்லையும் கேட்பதில்லை. சமூகத்தின் கட்டமைப்பை வடிவமைப்பது யார்? இது இன்று இளைஞர் கைகளிலேயே உள்ளது. எதிர்கால சிப்பிகளாகிய இளைஞர்கள், தமது சமூகம் பற்றிய ஆழ்ந்த கருத்தாக்கம் உள்ளவர்களாகவும் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாகவும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. தமது உள்ளாந்த வளத்தினையும் சக்தியினையும் தாம் வாழும் சமூகத்தின் உயர்விற்காக பயன்படுத்துவார்களேயாயின் சமூக மாற்றங்களோடு கூடிய, சமூகபண்பாடுகளின் வளர்ச்சியை சிதறடிக்காத கலாசார விழுமியங்களை நாம் பேண முடியும்.

**சரோஜா சிவச்சந்திரன்.**

# எம்மத்தியில் எமக்காக வாழ்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர் சுனிலா அபேசேகர

சுனிலா கடந்த இரு தசாப்த காலமாக இலங்கையிலும், தெற்காசியாவிலும் சமூக செயற்பாட்டாளராகச் செயற்பட்டு வந்தவர். குறிப்பாக, பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்காக அனைத்து தரப்பு போராட்டங்களிலும் பங்கெடுத்திருந்தார். சிறந்த சமூக செயற்பாட்டாளருக்கான விருதை ஐக்கிய நாடுகளின் முன்னாள் செயலாளர் கோவ்பி அனானிடமிருந்து 1999ம் ஆண்டு பெற்றுக்கொண்டவர். அத்தோடு, இலங்கையில் ஊடகங்கட்கு அச்சுறுத்தலாக இருந்த 2005 காலப் பகுதியில் சுதந்திர ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக போராடி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக இடையறாது குரல் கொடுத்தது மட்டுமன்றி, தமிழர் தரப்பு நியாயங்களை தென்பகுதி மக்களுக்கு எடுத்துக்கூறி இரு சமூகங்கட்கும் இடையிலான இணைப்புப் பாலமாகவும் செயற்பட்டவர். பெண்கள் உரிமைகளுக்காக அயராது குரல் கொடுத்தவர். இவர் மறைந்தாலும் இவரது உரிமைக்குரல் எம்மத்தியில் தொடர்ந்தும் ஒலிக்கட்டும்.

சரோஜா

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வெளியீடுகள் -2013

1. சிறுவர் உரிமைகள்
2. பெண்கள் உரிமைகள்
3. வடமாகாணத்தில் காணி உரிமையும் பெண்களும்
4. வடமாகாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்
5. கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு அறிக்கையும், பெண்களும்
6. நங்கை - சஞ்சிகை

## கையேடுகள் - 2013

1. மாகாணசபை தேர்தல் வாக்களிக்கும் முறை
2. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஒரு வழிகாட்டி

# தேர்தலில் பெண் வேட்பாளர்களை நியமிப்பதில் கட்சிகள் தயக்கம் காட்டுகின்றனவா?

மூன்று மாகாண சபைகட்கு எதிர்வரும் 21ம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. வடமாகாண சபைக்கான தேர்தல் 26 வருடங்களின் பின் முதன் முறையாக நடைபெறவுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. இதனால் பலரது கவனமும் வடமாகாண சபை தேர்தல் பற்றியதாகவே உள்ளது. தேர்தல் நீதி நியாயத்திற்குட்பட்டு சுதந்திரமாக இடம்பெறுமா? வேட்பாளர்கள் தமது பரப்புரைகளில் எவற்றை முதன்மைபடுத்தியுள்ளனர். வேட்பாளர்களின் அரசியற் பின்னணி யாவும் கவனமாக ஆராயப்படுகின்றன. தேர்தலை கண்காணிப்பதற்கு பல அமைப்புக்கள் யாழ்மாவட்டத்திற்கு வந்துள்ளன. இவர்கள் தமது கண்காணிப்புப் பணிகளையும் ஆரம்பித்துள்ளனர். வடமாகாண சபைக்கான தேர்தல் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் சிபார்சுகட்கு முன்னோடியாக போர் முடிவடைந்து 4 ½ வருடங்கள் கழிந்த நிலையில் இடம் பெறுகின்றது.

மாகாண சபைகளின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்த போதிலும் வடக்கில் அமையப்போகும் மாகாண சபைக்கு சவாலாக அமையப் போகும் பல விடயங்கள் எம் மக்கள் மத்தியில் உள. போர் முடிவடைந்து, இடம் பெயந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டும் குடியேற்றத்தை எதிர்பார்த்தும் இருக்கும் நிலையில் பிரச்சினைகளின் பரிமாணங் களும் அவற்றின் அளவு கோல்களும் புதிய வடிவங்களை எடுத்தல் வேண்டும். எம் மக்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகள் ஏராளம், குறிப்பாக பெண்தலைமை தாங்கும் குடும்பங்களில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்கள் மீண்டும் எழ முடியாதவாறு அழுத்தத்தை கொடுக்கின்றன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது பரப்புரைகளை மேலோட்டமாக நோக்கின் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம், இராணுவத்தினரை வெளியேற்றல், இளைஞர்கட்கு வேலைவாய்ப்பு, வாழ்வாதார மேம்பாடு, தேசியம், சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு என நீண்டு கொண்டே செல்கின்றது. இப்பரப்புரைகளில் முக்கியமாக போட்டியிடும் பெண்வேட்பாளர்களான அனந்தி சசிதரன், ஞானசக்தி சிறீதரன், மேரிகமலா குணசீலன், கீதாஞ்சலி, கே.வினுபானந்தகுமாரி போன்றோர் காணாமற்போனவர்களைத் தேடி அலையும் தாய்மார், கணவன்மாரை போரில் இழந்து குடும்பப் பொறுப்புக்களை தனியாக சுமக்கும் பெண்களது அவலநிலை, பாலியற் தொல்லைகட்குள்ளாகும் பெண்கள், சிறுமியர் பற்றிய விடயங்களை தொட்டுச் செல்கின்றனர். இவர்கள் பெண்களாக இருப்பதனால், பெண்கள்படும் அவலங்களை இவர்களால் காணமுடிகின்றது உணரமுடிகின்றது.

இச்சிறு தொகையினராக போட்டியிடும் பெண்களால் இவ்வாறு பெண்களுக்காக குரல் கொடுக்க முடியுமாயின், மாகாணசபையின் 18 ஆசனங்களையும், பாராளுமன்றில் 100 ஆசனங்களையும் பெறக்கூடிய வாய்ப்பிருந்தால் பெண்களால் நிறையவே சாதிக்கமுடியும். இது எப்படி சாத்தியமாகும்? தேர்தலில் யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்பது பொது நியதி. இந்நியதி சுயேச்சையாக போட்டியிடுவதற்கு பொருந்துமே தவிர, கட்சிகட்கல்ல. வடமாகாணசபை தேர்தலில் யாழ் தேர்தல் தொகுதியில் 11 அரசியற் கட்சிகளும் 9சுயேச்சை குழுக்களும் போட்டியிடுகின்றன. இக்கட்சிகள் 14 பெண்களை மட்டுமே தேர்தலில் போட்டியிடுவதற்காக நியமனம் கொடுத்துள்ளனர். சுயேச்சை குழுக்கள் 9 திலும் 25 பெண்கள் போட்டி

யிடுகின்றனர். சுயேச்சைக்குழு 9இல் மட்டும் **16** பெண்கள் போட்டியிடுகின்றனர். கட்சிகளில் நியமனத்தை பெற்றுக்கொள்ள முடியாத பெண்கள் சுயேச்சையாக போட்டியிடுவதற்கு முன்வந்துள்ளனர் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இலங்கையின் குடித்தொகையில் பெண்கள் 52%மாக இருந்த போதிலும் அரசியல் நீரோட்டத்தில் அவர்கள் பிரதிநிதித்துவம் போதியதாக இல்லை. சனநாயக நாடென்று கூறப்படும் இலங்கையில் அரசியல் பரப்பானது பெரும்பாலும் ஆண்களின் ஆதிக்கத்திலேயே உள்ளது. நல்லாட்சியில் பெண்கள் பங்கேற்றல் என்பது மிகமிக அவசியமானதாகும். இது எந்தவொரு சனநாயக செயற்பாட்டினதும் பிரிக்கமுடியாத அம்சமாக கருதப்பட வேண்டும். பெண்களின் அரசியல் உரிமை வாக்களிக்கும் உரிமையோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. பெண்களின் வாக்குகளைப் பெற்று மாகாண சபையை அலங்கரிக்கப் போபவர்கள் ஆண்களே. பெண்களுடைய தேவைகள் பிரச்சனைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் மட்டங்களில் அவர்களை பாதிக்கின்ற பிரச்சனைகளை முன்வைப்பதற்கும் தேசிய சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் பால்நிலைக் கூருணர்வு மிகு நிலைப்பாடுகளை எடுப்பதற்கும் பெண்களின் அதிகப்படியான பிரதிநிதித்துவம் தேவை.

நல்லாட்சி என்பது பெண்களின் சமமான பங்கேற்றலுடன் தீர்மானங்கள் எடுப்பதாகும். அதன் ஏனைய குணாம்சங்களான ஒழிவு மறைவற்ற தன்மை, பொறுப்புக்கூறல் போன்றவற்றைப் பூரணப்படுத்துவதற்கு பெண்களின் பங்கேற்பு அவசியமாகும். பெண்களின் பங்கேற்பு இருந்தால் மட்டுமே மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய தலைவர்களை உருவாக்க முடியும்.

இன்று பெண்களின் சமமான பங்கேற்பை ஊக்குவிக்கும் பல செயற்பாடுகள் இடம்பெற்று வருவது, பெண்களை ஒருபடி முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு வழி வகுத்துள்ளது. பெண்களின் சமமான பங்கேற்பு அரச கொள்கைகள் மூலம் மற்றும் சட்டங்கள் மூலமும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. பெண்களுக்கெதிரான அனைத்து வகையிலான அநீதிகள் ஒடுக்குமுறைகளை இல்லா தொழிப்பதற்கான ஐ.நாவின் விதப்பு ரையில் (சீடோ) பெண்களுக்கான உரிமை களை அரசாங்கம் ஏற்று உறுதியளித் துள்ளது. மற்றும் பெண்கள் பட்டயத்தில் தேசிய மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் போது வேட்பு மனு தாக்கல் செய்யம் போது பெண்களுக்கு நியாயமான பிரதிநிதித்துவம் கிடைத்தலை வலிதாக்கியுள்ளது. நாட்டில் பெரும்பான்மையாக பெண்கள் இருந்த போதிலும் ஆட்சி அமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகக் காணப்படுவதனால், பெண்கள் தொடர்பான தீர்மானங்களையும் ஆண்களே எடுக்கின்றனர். அண்மையில் பெண்களுக்கான ஆணைக்குழு நியமித்தல் தொடர்பாக, மகளிர் விவகார அமைச்சின் தேசிய மகளிர் குழு பாராளுமன்றிற்கு சமர்ப்பித்த சட்ட வரைவு, நிராகரிக்கப் பட்டது. காரணம் இதன் தேவை தொடர்பாக ஆண்களே அங்கு விவாதித்திருந்தனர்.

எவ்வாறாயினும் தேர்தலில் போட்டியிடும் பெண்களின் தொகை அதிகரிப்பதாக தெரியவில்லை. பெண்களை வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு அரசியற் கட்சிகள் இன்னும் தயங்குகின்றன. இவை மட்டுமன்றி, சமூக மனப்பாங்குகள் இன்னும் பெண்களை ஓரங்கட்டுவதாகவே உள்ளது. அரசியல் கட்சிகளோ தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற குறுகிய கால இலக்குகளை முன்வைத்தே பெண்களை முன்னிலைப்படுத்துகின்றனர்.

ஆட்சியை அமைக்கப்போகும் அரசியற் கட்சிகள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டும். தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்களின் சம பங்களிப்பை உறுதிப்படுத்தும் செயற்

பாடுகள் முன்னுரிமைப்படுத்தல் வேண்டும். தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஏற்படும் செலவு, இடம்பெறும் வன்முறை கள், பெண்களை இழிவுபடுத்தும் சொற் பிரயோகங்கள், ஆண் வேட்பாளர்களின் போட்டி என்பனவும், சக வேட்பாளர்கள் மத்தியில் கிடைக்கும் குறைவான ஆதரவு என்பனவும் பெண்கள் தமக்குக் கிடைக்கும் வாய்ப்பை தவிர்த்துக்கொள்ள காரணமா கின்றன. ஆயினும் இத்தடைகள் எல்லா வற்றையும் தாண்டி அரசியலில் பிரவேசி க்கக் கூடிய சக்தி வாய்ந்தவர்களாக தம்மை உருவாக்கிக் கொள்வதன் மூலம் பெண்கள் நல்லாட்சியின் ஓர் பங்குதாரர்களாக ஆக முடியும். ஆகவே பெண்களே! உங்கள் வாக்குகளை பெண் வேட்பாளர்களுக்கு வழங்கி பெண்களை உயர் நிலைக்கு அழைத்துச்செல்ல உதவுங்கள்.

**சரோஜா சிவசந்திரன்**

### சகோரோவ் மனித உரிமை பரிசு மலாலாவிற்கு

ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் விருதான சகோரோவ் மனித உரிமை பரிசு மலாலாவிற்கு வழங்கப்பட்டது. பாக்கிஸ்தானில் பெண்களின் கல்விக்காக போராடி வரும் மலாலா யூஅப்சாயை தலிபான்கள் சுட்டனர். மரணத்துடன் போராடி உயிர் பிழைத்து தற்போது லண்டனில் இவர் வசித்து வருகின்றார். தொடர்ந்தும் அஞ்சாது கல்விக்காக தனது போராட்டத்தை தொடர்ந்து செயற்பட்டு வரும் மலாலாவை கௌரவித்து இவ்விருது வழங்கப்பட்டது. 2013 நவம்பர் 20ஆம் திகதி பிரான்சில் நடைபெற்ற விழாவில் இவ்விருது மலாலாவிற்கு வழங்கப்பட்டது. 50 ஆயிரம் யூரோ பெறுமதியான இப்பரிசை உலகெங்கும் மனித உரிமைக்காக பாடுபடுபவர்களுக்கு அர்ப்பணிப்பதாக மலாலா தெரிவித்துள்ளார்.

# மாகாணசபைகளின் காணி அதிகாரங்கள்

- அ.சர்வேஸ்வரன் -

வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகளை எழுதிய பேனா மையானது காய்வதற்கிடையில் உயர் நீதிமன்றமானது மாகாண சபைகளின் காணி அதிகாரம் பற்றிய தீர்ப்பொன்றினை எழுதியது. வட மாகாண மக்கள் மாகாண சபை ஆட்சி பற்றிய பெரிய எதிர்பார்ப்புக்களுடன் இருந்த நிலையில் உயர் நீதிமன்றம் வழங்கிய காணி அதிகாரம் பற்றிய தீர்ப்பானது அரச காணிகள் மாகாண சபைகளுக்கு அல்லாது மத்திய அரசாங்கத்திற்கே உரியதாகும் எனவும் மாகாண சபைகளுக்கு அரச காணி கள் தொடர்பான மட்டுப் படுத்தப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே உள்ளதெனவும் அமைந்துள்ளது. வட மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப் பட்ட பின்னர் மாகாண சபைகளைத் துகிலுரிய வேண்டுமென்று பிரசாரம் செய்த தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு தித்திப்பான செய்தி ஒன்றா கவும் அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு கண்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கனவு கண்டவர்களுக்கு சகப்பான செய்தி ஒன்றாகவும் அமைந்துள்ளது. இது பதின்மூன்றாவது திருத்தத்தை ஆக்கியவர் களின் சாணக்கியத்தின் முன்னால் அதனை ஆக்க வைத்தவர்கள் தோல்வியடைந்துள்ள தனையும் காட்டி நிற்கின்றது.

1979 ஆம் ஆண்டில் ஆக்கப்பட்ட அரச காணிகள் (உடைமைகளை மீளப் பெறல்) சட்டத்தின் கீழ் அரச காணி யொன்றில் சட்ட விரோதமாகக் குடியிருந்த வரை வெளியேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராகக் கண்டியிலுள்ள மாகாண மேல் நீதிமன்றத்தில் ஆணை வழக்கொன்று கொண்டு வரப்பட்டது. இவ் வழக்கிலே, அரச காணிகள் மத்திய அரசாங் கத்தின் கீழ் உள்ளதனால் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க நியாயாதிக்கம் இல்லையென ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. கண்டி யிலுள்ள மாகாண மேல் நீதிமன்றமானது அரச காணிகள் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ளதனால் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு அந்த வழக்கினை விசாரணை செய்ய நியா யாதிக்கம் இல்லையென்ற தனது தீர்ப்பை 2002 ஆம் ஆண்டில் வழங்கியது.

இந்தத் தீர்ப்பிற்கெதிராகச் செய்யப் பட்ட மேன்முறையீட்டிலே, மேன்முறை யீட்டு நீதிமன்றமானது உயர் நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்புக்களின் அடிப்படையில் அரச காணிகள் குடியரசுக்குரியவை என்றா லும் அரச காணிகள் பற்றிய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குட்பட்டவை என்ப தனால் மாகாண தொடர்பிலான் நியா யாதிக்கம் உள்ளதென 2012 ஆம் ஆண்டு ஒக்ஸ்ட் மாதத்திலே தீர்த்தது. இத் தீர்ப்பிற்கு எதிரான மேன்முறையீடு உயர் நீதிமன்றத் திற்குச் செய்யப்பட்டது.

உயர் நீதிமன்றமானது, இலங்கை நீதிமன்றங்களின் அமைப்பிலே உள்ள அதியுச்ச நீதிமன்றமென்பதுடன் அது ஏனைய நீதிமன்றங்களிலிருந்தான இறுதி மேன்முறையீட்டை விசாரித்து தீர்ப்பு வழங்குகின்ற நீதிமன்றமாகவும் அரசிய லமைப்பு பொருள் விளக்கம் தொடர்பான பிரத்தியேக நியாயாதிக்கத்தைக் கொண்டு ள்ள நீதிமன்றமாகவும் உள்ளது. உயர்நீதி மன்றம் வழங்குகின்ற தீர்ப்பானது அதன் கீழமைந்தவைகளான ஏனைய எல்லா நீதி மன்றங்களையும் கட்டுப்படுத்துவதாகும்.

உயர் நீதிமன்றமானது 2013 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று இவ் வழக்கு தொடர்பான தனது தீர்ப்பை வழங்கியது. உயர் நீதிமன்றமானது அரச காணிகளானவை மத்திய அரசாங்கத்திற்கே உரியவை என்பதனால் மாகாண மேல்

நீதிமன்றத்திற்கு அரச காணிகள் தொடர்பாக ஆணை வழங்கும் நியாயாதிக்கம் இல்லையெனத் தீர்த்தது. அரச காணிகள் மத்திய அரசாங்கத்திற்குரியதா அல்லது மாகாண சபைகளுக்குரியதா என்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வினாவுக்கான விடையாக நாட்டின் அதியுச்ச நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு அமைந்தது. தனி நபரொருவரை அரச காணியிலிருந்து அகற்றுவது பற்றிய இந்த வழக்கின் தீர்ப்பானது மாகாண சபைகளை அரச காணியிலிருந்து அகற்றுகின்ற தீர்ப்பாக தேசிய முக்கியத்துவம் பெற்றது. உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் ஒரே முடிவினை வேறுவேறான தீர்ப்புகளாக வழங்கியிருந்தார்கள்.

உயர் நீதிமன்றமானது பதின்மூன்றாவது திருத்தத்தினால் திருத்தப்பட்டவாறான அரசியலமைப்பின் பல்வேறு ஏற்பாடுகளை பொருள்விளக்கம் செய்து தனது தீர்ப்பினை வழங்கியது. இனப் பிரச்சினைக்கான தீர்வாக மாகாண சபை ஆட்சி முறைமையை அரசியலமைப்பில் செதுக்கிய அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்பதாம் அட்டவணையிலுள்ள நிரல் 1 ஆனது மாகாண சபையின் கீழான விடயங்களை உள்ளடக்கிய மாகாண சபை நிரலாக உள்ளது. இந்த நிரலிலே காணி என்ற விடயமும் உள்ளக்கப்பட்டுள்ளது. இதன் பந்தி 18 ஆனது. காணி அதாவது காணி மீதான் உரிமைகள், காணி மீதான ஆட்சி, காணியை கைமாற்றுதல்,காணியைப் பாராதீனப்படுத்துதல், காணி குடியிருப்பு மற்றும் காணி அபிவிருத்தி என்பன மாகாண சபைகளுக்குரியவை என்கின்றது. இப் பந்தியானது மாகாண சபையினுடைய காணி பற்றிய இந்த அதிகாரங்களானவை மாகாண சபை நிரலுக்கான பின்னிணைப்பு 11 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவானவை என்கின்றது. மாகாண சபை நிரலில் உள்ளதனைப் பறிப்பதாக அந்த நிரலுக்கான இந்த பின்னிணைப்பு உள்ளது.

இந்த பின்னிணைப்பின் ஆரம்ப பந்தியானது அரச காணியானது குடியரசுக்குரியது என்பதுடன் நாடாளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டங்களுக்கமைய சனாதிபதியினால் அரச காணிகள் பற்றிய கையளிப்புக்கள் செய்யபட்டலாம் என்கின்றது. இதற்கமையவும் அதிலுள்ள பின்வரும் ஏனைய விசேட ஏற்பாடுகளுக்கமையவும் காணியானது மாகாண சபை விடயமாகும் என அதனது இரண்டாவது பந்தி மீள ஏற்பாடு செய்கின்றது. எனவே, காணியானது மாகாண சபைக்குரியது என்றாலும் அதன் முன் பந்திலுள்ள அரச காணி குடியரசுக்குரியது என்பதன் மூலமும் மாகாண சபையின் காணி அதிகாரங்கள் பற்றிய அதன் பின்னரான ஏனைய மட்டுப்பாடுகளின் மூலமும் அரச காணிகள் பற்றிய மாகாண சபைகளின் அதிகாரங்கள் மீளப் பறிக்கப்படுகின்றன.

இந்த பின்னிணைப்பானது மத்திய அரசாங்கமானது மாகாண மொன்றிலுள்ள தனக்குத் தேவையான அரச காணியொன்றை சம்பந்தப்பட்ட மாகாண சபையுடன் கலந்தாலோசித்துப் பயன்படுத்தலாம் என்கின்றது. உயர் நீதிமன்றமானது இதிலுள்ள கலந்தாலோசித்தல் என்பது இணைந்து தீர்மானமெடுத்தல் என்று அர்த்தமாகாது என குறிப்பிட்டது. எனவே மத்திய அரசாங்கம் அரச காணியைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் சம்பந்தப்பட்ட மாகாண சபைக்கு இல்லை.

மாகாண சபைக்குட்பட்ட விடயமொன்றுக்காக மாகாண சபைக்கு தேவைப்படும் அரச காணியை மத்திய அரசாங்கமானது அம்மாகாண சபைக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல் வேண்டும் என்பதுடன், அம் மாகாண சபையானது நாடாளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டங்களுக்கமையவும் மாகாண சபையால் ஆக்கப்பட்ட நியதிச் சட்டங்களுக்கு அமையவும் அந்தக் காணியை நிருவகித்தலும், கட்டுப்படுத்தலும் மற்றும் பயன்படுத்துதலும்

வேண்டும் என்கின்றது. அதாவது, மாகாண சபையானது அதற்கு மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணிகளைச் சொந்தம் கொள்ள முடியாது. ஆனால், அக் காணி களை நிருவகிப்பதற்கும், கட்டுப்படுத்து வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்குமான மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை மட்டுமே கொண்டிருக்கும்.

மாகாண சபையொன்றினுள் அமைந்துள்ள அந்த அரச காணியை சம்பந் தப்பட்ட மாகாண சபையின் ஆலோசனை யின் மீது பொருத்தமான சட்ட ஏற்பாடு களுக்கமைய எவரேனும் பிரஜைக்கு அல்லது தாபனத்திற்கு வழங்கும் அதிகாரம் சனா திபதிக்கு உள்ளது. உயர் நீதிமன்றமானது மாகாண சபையின் ஆலோசனை மீது என உள்ளதே அன்றி, மாகாண சபையின் ஆலோசனை மீது மாத்திரமே என இல்லை யென்ற வேறுபாட்டைச் சுட்டிக் காட்டிய துடன் அதன் காரணமாக மாகாண சபையின் ஆலோனை என்பது சனாதிபதி தனது காணி பற்றிய அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான கட்டாயமான முற்தேவைப்பாடொன் றாகாது என்றது. எனவே, மாகாண சபை யினுள் அமைந்துள்ள அரச காணியொன்றை மாகாண சபையின் ஆலோசனை இன்றி சுயமாகவும் வழங்குவதற்கான அதிகாரம் சனாதிபதிக்கு உள்ளது.

அத்துடன், அந்த அரச காணி என்றிருப்பது மத்திய அரசாங்கத்தால் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட காணி யையே குறிப்பிடுகின்றது என்றது. இவ்வா றானால், மத்திய அரசாங்கத்தால் மாகாண சபையொன்றுக்கு வழங்கப்பட்ட அரச காணியையும் சனாதிபதியானவர் சுயமாக அல்லது மாகாண சபையின் ஆலோசனை யின் மீது எவரேனும் பிரஜைக்கு அல்லது தாபனத்திற்கு வழங்கலாம். எனவே, மாகாண சபையானது சனாதிபதிக்கு அரசிய லமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அரச காணிகளை கையளிக்கின்ற அதிகாரத் தையும் கட்டுப்படுத்த முடியாது.

மேலும், பின்னிணைப்பு 11 ஆனது, மத்திய அரசாங்கமானது தேசிய காணி ஆணைக்குழுவை தாபித்தல் வேண்டும் எனவும், அந்த ஆணைக்குழுவானது அரச காணி தொடர்பான தேசிய கொள்கையை வகுப்பதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும் எனவும் ஏற்பாடு செய்கின்றது. இந்த ஆணைக்குழுவானது, நாட்டிலுள்ள ஒவ்வொரு மாகாண சபையினதும் பிரதி நிதிகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பின்னிணைப்பு 11 ஆனது. மாகாண சபைகளானவை அவைகளுக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது தேசிய காணி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட தேசிய கொள்கையை முறையாக கவனத்திற் கொள்ளுதல் வேண்டும் எனவும் ஏற்பாடு செய்கின்றது. உயர் நீதி மன்றமானது அரச காணிகள் மாகாண சபைகளுக்குரியவை அல்ல என்பதற்கான ஆதாரமொன்றாக இதனையும் காட்டியது. மாகாண சபையானது காணி பற்றிய தனது அதிகாரங்களைப் பிரயோ கிக்கும் போது தேசிய கொள்கையை முறை யாகக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதும் மாகாண சபையினுடைய காணி அதிகாரங்கள் மீதான மற்றொரு மட்டுப் பாடாக உள்ளது.

பதின்மூன்றாவது திருத்தத்தை ஆக்கியவர்கள் காணி என்ற விடயத்தை மாகாண சபை நிரலின் கீழ் உள்ளடக்கிய போதிலும் அந்த நிரலுக்கான இணைப் பொன்றை இணைத்ததன் மூலம் மாகாண சபைகளிடமிருந்து காணி தொடர்பான அதிகாரங்களைப் பறித்தெடுத்து விட்ட ார்கள். எனவே மாகாண சபைகளின் காணி அதிகாரமானது உளதாகி இலதாகின்றது.

உயர் நீதிமன்றமானது மத்திய அரசாங்கத்தின் கீழான விடயங்களைக் கொண்டுள்ள நிரல் 11 இல் "மாகாண சபை களுக்கு அளிக்கப்பட்ட அளவிற்குத் தவிர அரச காணிகள்" என உள்ளதனையும் குறிப்பிட்டு அரச காணிகள் என்ற விடய மானது மத்திய அரசாங்கத்தின் நிரலி லிருந்து மாகாண சபை நிரலுக்கு பகுதி யளவில் வழங்கப்பட்டதாகவே உள்ள

தென்பதனால் அரச காணிகள் மத்திய அரசாங்கத்திற்கே உரியவை எனவும் தெரிவித்தது.

காணியானது எல்லா வகையான அபிவிருத்திகளுக்கும் செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைந்த ஒன்று வட மாகாண சபையைப் பொறுத்தவரை முக்கியமாக கிளிநோச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள காணிகளில் பெரும்பாலானவை அரச காணிகளாக உள்ளன. இவைகள், விவசாயம் மற்றும் விவசாய சேவைகளுக்கும் அவசியமானவை. மாகாண சபை நிரலின் கீழ் விவசாயமும் விவசாய சேவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால், இவ் விடயத்திலும் அரச காணி என்பது உள்ளடக்கப்படாது விலக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மாகாண சபைகள் போதிய காணி அதிகாரங்களைக்கொண்டிராத போது அவை எந்தளவிற்கு அவைகளுக்கென ஒதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான தமது அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியுமென்ற வினாவும் எழுகின்றது.

எனவே பதின்மூன்றாவது திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட் மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய ஏற்பாடுகளின் பொருள் விளக்கமானது மாகாண சபைகள் காணி அதிகாரங்களை உரிமையாக பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்து பெற முடியாதவைகளாகவும் மத்திய அரசின் மடிப்பிச்சையில் தங்கியிருந்தே பெறவேண்டியவைகளாகவும் உள்ளன என்பதைக் காட்டுகின்றது.

மாகாண சபை நிரலுக்கான பின்னிணைப்பு **11** ஆனது மாகாண சபைகளுக்கு உட்பட்ட விடயங்களுக்குத் தேவையான அரச காணியை மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதும் எதிர்காலத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையே இழுபறி நிலைகளை ஏற்படுத்தலாம். ஏனெனில், மாகாண சபைகளுக்குட்பட்ட விடயங்களுக்காக அரச காணிகளை மத்திய அரசாங்கம் வழங்குவது எந்தளவிற்குக் கட்டாயமானது, எந்தளவு அரச காணிகளை வழங்குதல் வேண்டும் மற்றும் அவ்வாறு வழங்கப்பட்ட காணிகள் மீது மாகாண சபைகள் எநதளவிற்கு அதிகாரங்களைக் கொண்டிருக்கலாம் என்பவைகளும் அரசியலமைப்புச் சர்ச்கைகளை ஏற்படுத்தலாம். இவைகளுக்கான தீர்வானது மாகாண சபைகளுக்குச் சாதகமானதாக அமையாது விட்டால் மாகாண சபைகளுக்குள்ள ஏனைய விடயங்கள் பற்றிய அதிகாரங்களும் அர்த்தமற்றவைகளாகலாம்.

எனவே, அரச காணிகள் தொடர்பிலான மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்ற அரசியலமைப்பு விடையானது அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஓர் அம்சமாக அரச காணிகள் தொடர்பான அதிகாரங்களை எந்தளவிற்கு மாகாண சபைகள் பெறுதல் வேண்டுமென்ற அரசியல் வினாவைத் தோற்றுவித்துள்ளது.

அதேவேளை, இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையின் கீழான அதிகாரங்கள் நாட்டிலுள்ள எல்லா மாகாணங்களுக்கும் சமச்சீராகப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டுமா என்ற வினாவும் எழுகின்றது. இந்த வழக்கிலான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பானது அரச காணி பற்றிய அரசியலமைப்பு பிரச்சினையின் முடிவாகவும் அமைந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையானது சட்ட ஏற்பாடுகளுக்கமைய இணைந்திருக்கவில்லை என்பதனை நியாயப்படுத்தி உயர் நீதிமன்றமானது இணைந்திருந்த மாகாண சபையை இரு வேறு மாகாண சபைகளாகப் பிரித்தது. இன்று சட்ட ஏற்பாடுகளை ஆதாரங் காட்டி அரச காணிகள் மத்திய அரசாங்கத்திற்கே உரியவை எனத் தீர்த்துள்ளது.

இவ்வாறான தீர்ப்புக்களை வழங்குவதற்குச் சாதகமாகவே பதின்மூன்றாவது

திருத்தத்தின் ஏற்பாடுகள் உள்ளன. எதிர் காலத்தில் மாகாண சபைகளின் பொலிஸ் அதிகாரம் உட்பட பல மகக்கிய அதிகாரங்கள் பற்றிய பல்வேறு வழக்குகள் நீதி மன்றங்களுக்குச் செல்லலாம். இதற்கு காரணம் மாகாண சபை முறையை அறிமுகப்படுத்திய பதின்மூன்றாவது திருத்தமானது மக்களின் முழுமையான பங்கேற்பின்றி அவசரமாகத் தயாரிக்கப்பட்ட ஒன்று என்பதுடன், அதிலுள்ள பெரும்பாலான ஏற்பாடுகள் ஒரு கையினால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மீள இரு கைகளாலும் பறிப்பனவாகவே உள்ளன.

இத்திருத்தச் சட்டத்திலுள்ள மாகாண சபைகளின் அதிகாரங்கள் பற்றிய ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள் மற்றும் சொற்பதங்கள் ஆகியவைகளும் கருத்து மயக்கம் உள்ளவைகளாகவும் இருபொருள் தருபவைகளாகவும் உள்ளன. அவைகளும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை வலுப்படுத்தி மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்தும் வகையிலான பொருள் விளக்கங்களுக்கு இட்டுச் செல்பவைகளாகவே உள்ளன.

எனவே மாகாண சபைகளின் முக்கிய அதிகாரங்களானவை கானல் நீரின் காட்சிகளாகவே உள்ளன. நீண்டகாலமாக தனக்கென மாகாண சபையையும் ஆட்சி அதிகாரத்தையும் எதிர்பார்த்து வந்த வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் மீண்டும் இலவுகாத்த கிளிகளாவார்களா என்ற வினா இதனால் எழுகின்றது.

**நன்றி**

**வீரகேசரி**


**Woodsons**

*Distributors for Arpico Products*

**P.SIVANESAN**
**Proprietor**

***# 68 - 70,***
***Manipay Road,***
***Jaffna.***

*Dial: 021 222 2430*

# உடைந்த உள்ளம் உன்னத இல்லம்

மாறிடும் உலகம், மறைந்திடும் மனிதம் மனிதனுக்காகவா வாழ்க்கை? பிறக்கிறோம் இறக்கிறோம். இந்த வார்த்தை க்கு நடுவில் எத்தனை இன்பம், எத்தனை துன்பம் காலத் தை வெல்ல காரியம் சொல்ல முயன்றுபார் முடியும். மனிதா உன் மனம்போன்று நீ மகான் ஆக.

எம்மில் அனேகர் வாழத்துடிக்கின் றனர். வாழ்க்கைப்போரினை முகம் கொடு க்க எந்த ஆயுதமும் இன்றி தனிமை யில் தவிக்கின்றனர். ஒவ்வொரு தனி நபருக் குள்ளும் ஓராயிரம் விடைகளான வினாக்கள் ஏன் நிம்மதி இல்லை? ஏன் துன்பம்? ஏன் எனக்கு சஞ்சலம்? ஏன் என்னால் இதை செய்யமுடியவில்லை? நாளை எப்படி போகும்? எனக்கு நண்பர்கள் யார்? நான் யார்? என்னால் சிரிக்க முடிய வில்லையே, எனக்கு எதுவும் முடியாதே, இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஓ! மனிதர்களே உங்களை படைத்த இறைவன் உங்களுக்குள் படைத்தவற்றை மனம் என் னும் மாயமானா சக்தியினை மறந்து விடா தீர்கள்.

எங்களிடம் நாம் நிம்மதியை காணா விட்டால் வேறு இடத்திலோ மற்ற வரிடமோ அதனைப் பெற்றுக்கொள்வது என்பது மூடத் தனமான விடயம். குறிப்பாக எமது செயற் பாடுகள் உள்ளத்தின் எண்ண அலைகள் எமது நிம்மதியினை பறித்து விடுவதும்உண்டு. உதாரணமாக:- சில வேளை நாம் துன்பத்தில் இருக்கும் போது நமது நண்பர்களையோ உறவினர்களையோ சந்திக்க நேரிடலாம். அல்லது நாம் அமைதி யை தேடி வேறு இடம் கண்டு செல்லலாம். அங்கு சென்றும் நாம் அமைதியாய் இருப் பது இல்லை. நமது பிரச்சனைகள் பற்றியே பேசிக்கொண்டு இருப்போம். துன்பத்தை நினைத்து வேத னைப்படுவோம். இது தவறு மனம் தூய்மை யானது.அதனை அழுக்கா க்குவது நாம்தான்.

ஒரு நாள் ஒரு கணவனும் மனைவியும் கடற்கரைக்கு இளைப்பாற சென்றனர். மனைவி கணவனிடம் “இஸ்கமானஸ்கப்பா நீங்க வீட்டை பூட்டினீங்களா?” என்று சந்தேகத்தேடு கேட்டாள். கணவன் “ஆம்” என்றான். ஆனால் இவள் அதனை விடுவதாக இல்லை. வந்த இடத்தில் கடற்கரையில் எத்தனை இனிமை அதனை அனுபவிக் காமல் தேவையற்று தனது மனதினை குழப்பிக்கொண்டே வீடுபோய் சேர்ந்தாள். இப்படித்தான் நாம் அனைவரும் எமது மனதி னை தேவையின்றி அமைதியற்றுப் போக செய்கின்றோம்.

ஆரம்பத்திலே செய்ய வேண்டியதனை காரிய முடிவிலே செய்வதால் தான் அச் செயற்பாடு முழுமை பெறாமல் ஆரம்பத்தி லேயே இருக்கும் என்பதனை மறக்காதீர்கள். சந்தோசம் என்பது வாழ்க்கையை தீவைத்து கொழுத்த மனதிற்கு தெளிக்கும் மண்ணெண் ணெய் போன்றது. மனம் ஒரு குரங்கு அதனை அலையவிடாதிருங்கள். வாழ்க் கைப் போரினை வெற்றி கொள்ள நிம்மதியே ஓர் பெரிய வலுவான ஆயுதமாகும்.

நடைமுறை வாழ்க்கையில் ஒவ்வொரு பெரிய காரியமும் நம்பிக்கையில் தான் ஆரம்பிக்கின்றது. நாம் ஒரு பெரிய கட்ட டம் ஒன்றை கட்ட தொடங்கும் போது இது உடைந்துவிடும் என நினைத்து விட்டால் அது நம்மால் நிச்சயமாக கட்ட முடியாது. நம்மில் அனைவர் முடியாது என்ற ஒற்றை வார்த்தையால் சுலபமாக முடித்துக் கொள் கிறோம். ஒரு விடயத்தை எப்படிச் செய்ய லாம்? செய்யலாமா? என வினா எழுப்புவது அதற்கான வழிகளைக் கண்டு பிடிப்பதற் காகவே அதனை முடியாது என்று முடித்து விடவில்லை. உன்னால் முடியுமென மனதி னை பலப்படுத்தினால் நீ தேவையில்லை உன் மனமே செய்து முடித்துவிடும். முடி யாது என்ற வார்த்தையை உனது வாழ் கையில் இருந்து எடுத்துவிட்டால் உன்னை

வெல்ல யாராலும் முடியாது. முடிந்தவரை நாம் நம்மில் நமக்காக வைக்கப்பழக வேண்டும். தான் அழகானவள் என்னால் அன்பாக திடனுடன் பேசமுடியும். என்னால் படிக்க முடியும். என்னால் சாதிக்க முடியும் என நம்பிக்கை என்ற உரத்தை உங்கள் மனதில் தினம் தூவுங்கள். துன்பம் துவண்டு ஓடும். உங்களை நீங்கள் நேசியுங்கள். அப்போது தான் உங்கள் அயலவனை நேசிக்க முடியும். உன்னை நீயே நம்பாத போது எப்படி நம்பிநடக்க முடியும். நம்பிக்கை இல்லையேல் பூமி சுழல்வதும் உனக்கு பொய்யாகி விடும். இயற்கையும் இன்பமும் உன்னை புறக்கனித்துவிடும். எதற்கோ பிறந்தோம், ஏன் வாழ்கின்றோம், எனறு உன்னை நீயே இழந்து விடுவாய். எதனையுமே என்னால் முடியாது எனறு மனதை சோர்வடையச் செய்யாமல் உங்களை நம்புங்கள். வாழ்க்கை தீபம் தானாய் ஒளிதர ஆரம்பிக்கும்.

எனது வாழ்க்கையின் தோல்விக்கு காரணம் எமது மன அமைதி இன்மைதான். ஞானம் உள்ள மனிதர்கள் பதற்றப்படமாட்டர்கள். என்னைப் பொறுத்தவரை மனதின் அமைதியான நிலையை ஞானம் எனவும் பொருள் கூறலாம். நாம் எமது மனதினை அமைதியாக நிம்மதியாக வைப்பதன மூலம் பெரும் சாதனை செய்ய முடியும் என்பதைனை அறிவோம். இளைப்பாறும் எம்மால் நிரந்தரமான மன அமைதியை அடைய முடிவதில்லை. அதற்கான வழி எமக்கு தெரிவதில்லை. எமது புலன் அடக்கம் மன அமைதி தான்.

கண்களால் பார்க்காமல் மூடிக் கொண்டாலும் எம்மால் அக்காட்சியினை பார்க்கமுடியும். எமது புறக்கண்களை விட மனக்கண் என்பது நாம் பார்க்கக் கூடாது என நினைக்கும் விடயத்தினை தெளிவாகப் பார்க்கும் எமது கற்பனை எத்தனையோ பழக்கங்களை உருவாக்கி யுத்த களங்களை அமைத்துவிடும் சக்தி கொண்ட பெரிய வல்லமை எனலாம். ஒரு இடத்தில் இருந்து கொண்டே பல நோய்களை பார்வையிடும் பல உளவுகளை கண்காணிக்கும். அப்பப்பா கற்பனை கற்பனை அது புகழ முடியாத புதிர் ஒன்றைப் புனைந்து கொள்ளுங்கள். புரியாத புதிய பிரச்சனைகளை உருவாக்கி உங்கள் அமைதியை குலைத்து உங்களை அலைக்களிக்க இதுவே காரணம் தேவையற்ற சந்தேகங்களால் வீண் வாதங்கள் தான் சண்டைகள் மனஸ்தாபங்கள் ஏற்படுவது கற்பனையே ஆகும். காலங்களின் கற்பனை வேறு அது அற்புதமானது.

எமது ஐம்புலனை அடக்க நாம் தியானத்தை கைக்கொள்லாம். தியானத்தின் போது நாம் எல்லாவற்றையும் மறந்து ஓட புதிய அனுபவம் பெறுகின்றோம். இது நாம் ஓய்வுக்காக தூங்குவது வழக்கம். ஆனால் தூக்கம் உடல் உறுப்புக்களை அமைதிப் படுத்தினாலும் நுரைஈரல், இதயம் போன்ற வற்றை அமைதிப்படுத்தாது அதிகப்படுத் தும். தூக்கத்திலும் விழிப்பிலும் நமது உள் மனம் செயற்படுவது அதிகமாகும். உள் மனம் என்பது என்ன என்றால் ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் ஆழ்மனம் என்பது உண்டு. இது அவனது சிறுபராயத்திலோ இப்போதோ அடைக்கி வைக்கப்பட்ட ஆசைகள், விருப்பங்கள், வெறுப்புக்கள், அதிக பயஉணர்வுகள், சந்தேகம், கோபம், பொறாமை, ஆத்திரம், கவலை என்பவற்றை கொண்டிருக்கும். இது தூங்கும் போது கனவாக வெளிப்படும். விழிப்பில் கற்பனையாக அல்லது தனிமையில் தனக்குள்ளே உரையாடுவதிலும் மற்றும் அநேக வெளியான நடத்தையாலும் அதன் தாக்கத்தைக் காணலாம். எனவே எம்மால் புலனை அடக்குவது சுலபமானதன்று. ஆனாலும் தியானம் என்பது எதனையுமே நினைவு கூறாத நிலையாகும். தியானத்தின் போது எல்லா உறுப்புகளும் இதயம், நுரையீரல் கூட அமைதி நிலையடையும் வாழ்க்கையில் மனச் சோர்வின்றி உற்சாகத்தை பெற்றுக் கொள்ள இது ஓர் சிறப்பான வழியாகும்.

மனிதன் அனேக தவறுகளைத் தெரிந்தே செய்கின்றான். பின்னர் சூழ்நிலை, நிற்பந்தம் என காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முனைகின்றான். ஆனாலும் அவனது மனச்சாட்சி குற்ற உணர்வை உணர்த்தி அவனது தனியான நிம்மதியைக்

கெடுத்துவிடும். உலகுக்கு அவன் மகிழ்வாக இருப்பதாக காட்டிக் கொண்டாலும் தனிமையில் மனதளவில் அவன் மன உழைச்சலால் நிம்மதி இன்றி அலைச்சலால் அவஸ்தைப்படுகின்றான். தவறினைச் செய்த ஒருவனுக்கு பிராயச்சித்தமாக மன்னிப்புக் கொள்ள துணைபுரிகிறது. தவறினை நம்பத்தகுந்த நண்பரிடமோ உறவிடமோ கூறிவிடுதல் மன அமைதியைத்தரும் எமது குற்றத்தை உணர்ந்து மன்னிப்பை பெற்றுக் கொண்ட ஒருவன் திருந்தியவனாவான். அவன் சஞ்சலமற்ற மன நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியும். குற்றஉணர்வும் வாழ்க்கையை முடித்து விடத்தூண்டு கின்றது. பல மதங்களின் கருத்துக்களும் மன்னித்தலைப் பற்றிக் கூறியிருப்பதனை நாம் அறிவோம்.

தினமும் உழைத்து சோர்ந்து போன வன் தனது களைப்பை போக்க ஓய்வு எடுக்கின்றான். ஓய்வு மன அமுத்தத்தைக் குறைக்கும் ஆனால் உழைப்பின்றிய ஓய்வு சோம்பேறித்தனத்தை தரும் ஒரு மனிதன் ஓய்வுக்காக பல வழிகளை நாடமுடியும். ஆழ்ந்த தூக்கம் கவலையின் வலிமையைக் குறைக்கும். குழம்பிய மனதை தெளிவாக்க சிந்தனையைக் கூர்மைப்படுத்த உணர்ச்சியை அமைதியாக்க களைப் நீக்க இவை ஆழமான தூக்கம் துணையாகின்றது. தேவையான போது நாம் நல்ல தூக்கத்தை பெற வேண்டும். வாழ்க்கையின் அழகுத் தன்மை யினையும் வண்ண அலங்கரிப்புக்களும் ஒய்ந்து காணாமல் போய் பிரச்சினை தலைதூக்க சிலர் மரணத்தை தேடும் கோழைகளாக காணப்படுகின்றனர். துணிவு ள்ளவன் பிரச்சினையை சமாளித்து வாழ் வான். இதற்கு காரணம் மனதில் ஏற்படும் விரக்தியே எமது உள்ளத்தின் அமைதி யின்மை வாழ்க்கை சாவால்களை எதிர் கொள்ள முடியாமை தோல்விகளை சகிக்க முடியாமை அர்த்தமில்லாத எதிர்பார்ப்புகள் எமக்கு விரக்தியை உண்டாக்குவதுடன் வாழ்க்கை வேண்டாம் என தற்கொலை முயற்சிக்கு தூண்டுவதாகவும் காணப்படு கின்றது. உ-ம்:- கடந்த **16.4.2012** அன்று யாழ்பல்கலைக்கழக 4ம் வருட கலைப்பிரிவு மாணவி உலகை புரியாமையும் தன்னையும் தன்மனதையும் தாண்டி தனிமையின் கோரத்தினால் உள்ளத்தின் அமைதியை சரி செய்யாமல் மனஅழுத்தம் காரணமாக தற்கொலை செய்துகொண்டாள். இவள் முட்டாள் அல்ல. வாழ்க்கையின் முன்னேற் றத்தைக் காண 4 ஆண்டுதூங்காமல் துடித் தவள் உள்ளத்துடன் அவள் பேச மறுத்தாள். உலகத்தை வெறுத்ததால் தன்னையே மறந்தாள். தனித்துப் போனாள். மரத்துப் போன அவள் மனம் மட்டுமா? இன்று அவளும் அல்லவா? மரித்துப் போனாள் ஆகவே முன்னேற்றத்தின் தடைக்கற்களே விரக்தி என்பதனை மறவாதீர்கள். எல்லா வற்றையும் அன்பு செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். அன்பு உள்ளத்தைக் கட்டும், நடத்தும் புதிய வழியில் நடத்தும்.

மனிதன் தினமும் ஒரே வகையான வேலையை செய்வதனால் அவனுக்கு நிச்சயம் சலிப்பு வந்துவிடும். சாதரணமாக தினமும் மூன்று வேளையும் எம்மால் இடியப்பத்தினை உணவாக்கிக் கொள்ள முடியுமா? இல்லை எனவே ஒரு விடயத்தில் சலிப்பு வரும் போது அதனை தவிர்த்து வேறு விடயங்களில் பொழுதினை மகிழ் வாக கழிக்க முயற்சி செய்ய வேண்டும். அன்பான நண்பர்கள் அனேகர் மனிதனுக்கு தேவை இன்றைய நவீன தொழிலைக் காட்சித் தொடர்களோ, பூங்காக்களோ, கடற்கரைகளோ, இயற்கையோ எமக்கு அமைதியை தரும் நல்ல உறவுகளாகும்.

நாம் வாழ ஒரு வீடு தேவை எமது வீடு தினம் குப்பைகளால் நிறைகிறது. தூசி களால் பிழக்கின்றது. ஏன் உயிர் கொல்லி பூச்சிகள் உள்ளே வளர்கின்றது. அதற்காக வீட்டையே இடித்து விடுகிறோமா என்ன? கூட்டிக் கழுவி வெள்ளை அடித்து உடைந் ததை புதிதாகக் கட்டி அழகுபடுத்திக் கொள் வது இல்லையா? அது போன்று தான் "மலை குலைந்தாலும் மனம் குலையா நிலை வேண்டும்." எவ்வளவு பெரிய மலையே

இடிந்து போகும் அளவு சக்தி தாக்கினாலும் மனம் ஒருபோதும் இடிந்து விழக் கூடாது. துன்பங்களை, சோர்வுகளை, விரக்தியை கூட்டிக்கழுவி சுத்தம் செய்து புதிய மனது டன் என்றும் புதிய யுகம் காணப் போராட வேண்டும். எல்லாவற்றையும் சொல்லி விடுவது சுலபம். வாழ்க்கையில் செய்வது தான் கடினம். ஒரு விடயத்தை பயிற்சி செய்யும் வரை எதுவுமே கடினம் தான். பயிற்சி மூலம் சாதித்து விட்டால் அதனைப் போன்று சுலபமானது ஒன்றும் இல்லை.

ச.பிரம்மியா
மெய்யியற்றுறை
3ம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்.

மனதிற்கு பிடித்துவிட்டால் தான் கண்ணுக்கு அழகாக தெரியும். வாழ்க்கை யை மனமாற வாழுங்கள். மலரும் நாட்களில் உங்கள் மனம் போதுமே உங்களை மகானா க்கி விடுவதற்கு அறிவினால் எட்டாத அளப்பெரிய சாதனையை உன் மனம் செய்யும் அறிந்துகொள். இமையத்தின் உச்சியில் இருக்கிறாய் மனிதா பனிக்கட்டி யின் குளிரை பாாக்கவாவது ஆசைப்படு!

மனம் உண்டானால் இடமுண்டு.

> **“எல்லா மட்டங்களிலும் அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமை பெண்களுக்கு உண்டு”**

# மரத்துப்போன மனங்கள்........

சூரியன் தன் ஒளிக்கற்றையினை விரித்த தன் ஊடே அந்தக் கிராமமும் கிராம மக்களும் ஊசலாடத் தொடங்கினர். விடிகாலையின் இனிமை சிறிது சிறிதாக மறைந்து வெப்பம் தன் கொடுமையைக் காட்டத்தொடங்கியது. சுமதி அப்போது தான் எழுந்திருந்து அசைக்கவே அசதியாக இருந்த உடலை அசைத்தபடி உள்ளிருக்கும் சோகத்தை எல்லாம் மறந்து தனது தங்கைகளின் கல்வியை கருத்தில் கொண்ட தனால் படுக்கையை மடித்து விட்டு தண்ணீர் எடுக்க ஆயத்தமானாள். படுக்கையை நனைத்து விட்டு அந்த ஈர உடையுடன் கிடந்த தனது மூன்றாவது தங்கையை கண்களால் பார்த்துவிட்டு பெருமூச்சு விட்டபடி சென்றாள்.

குடத்தை எடுத்து சென்று தண்ணீர் அள்ளிக் கொண்டு வந்தாள். தண்ணீர் வந்துவிட்டது. இனி தேத்தண்ணி வரும் என்று வரிசையாக ஒருபுறம் அமர்ந்திருந்த தனது தங்கைகளையும் அவர்களின் எதிர் பார்ப்பையும் பார்க்க காலியாய் கிடந்த சீனிப்போத்தல் தான் அவள் கண்முன்னே தோன்றியது. இது அவளது வயிற்றை ஒருதடவை பிராண்டியது. தனது வலியை அப்போது உணர்ந்தாள். ஏனெனில் இரவும் அவடகள் பட்டினியுடன் உறங்கியதுதான். மறுபுறம் கசிப்புக்கு மட்டுமே கணக்காய் உழைத்து விட்டு வயிற்றையே ஓசோன் படையை ஓட்டை போட்டும் நச்சுப்பொரு ளோடும் கூட ஒப்பிட முடியாத பாழாய்ப் போன கசிப்பால் நிரப்பிவிட்டு கல்நெஞ் சுடன் படுத்திருக்கும் தன் தந்தையைப் பார்த்த அவளுக்கு வயிற்றைப் பிரட்டியது. மறுபுறம் " அக்கா எனக்கு தேத்தண்ணி வேணும்" குடும்ப நிலை பற்றி உணராத பதினைந்து வயது தங்கையின் முதலாவது விண்ணப்பம்.

வெற்று சூப்பிப் போத்தலை தன் முன்னே வைத்துவிட்டு தேனீர் வேளையை எதிர் பார்த்து திருக்களுக்குன்றத்து கழுகு போன் று காத்திருந்த அந்த பிஞ்சுக் குழந்தை வாய் பேசாது அகிம்சை வழியில் முன் வைக்கும் போராட்டத்தைப் போன்று இருந்தது அந்த கடைசித் தங்கையின் வேண்டுகோள். "அக்கா இன்டைக்கு கணிப்பீட்டு காசு கொடுக்க வேண்டும். எல்லோரும் குடுத் திட்டினம். நான் மட்டும் தான் இன்னும் குடுக்கேல" இது முதல் தங்கை பிரியாவின் வேண்டுகோள். இரண்டாவது தங்கை வாய் திறக்க முன்னமே முந்திக் கொண்டாள் சுமதி "சரி நீங்க கேட்டதெல்லாம் நாளைக்குத் தாறன்" இது ஏழ்மையால் பிறந்த அசாத்திய வாக்குறுதிகள். தங்கைகளின் அடுக்கான கேள்விகள் ஈட்டியாய் பாய்ந்தன. "எடியே விடிஞ்சு இவ்வளவு நேரமாகியும் தேத் தண்ணி உத்தேலையாடி" கசிப்பை உறுஞ்சி யதும் அவர்களுக்கு என்றே புறப்படும் வார்த்தைகளை அள்ளி வீசினான். கசிப்பின் வீரம் எனும் குறையாத தன்மையே தாக்கமான வார்த்தையின் வெளிப்பாடு. தந்தையை தட்ட முடியாது என்றுதான் என்னவோ சுமதியின் கடைசித்தங்கை தன் வெற்று சூப்பிப் போத்தலை நிலத்தில் தட்டி தட்டி விளையாடியது. தேத்தண்ணி தருவீங்களா? என்பதைப் போன்று ஒரு கேள்வியைத் தனது சூப்பிப் போத்தலின் உதவியுடன் கடைசி கேட்கிறதோ? தெரியாது.

சுமதியின் தந்தையின் வயிற்றை தவிர வேறு எல்லோரது வயிறும் அங்குள்ள வெற்றுப்போத்தலைப் போன்று வெறுமை யாகத்தான் இருந்தன. வறுமையினால் அவளோ எரிந்து கொண்டிருக்கும் அடுப் பின் முன் தனது மனமும் எரியும் வண்ணம் குந்தியிருந்தாள். கல் மனம் படைத்த தன் தந்தையின் பொறுப்பற்ற செய்கையினால் ஆத்திரம் அடைந்தாலும் காலை வேளையி

லேயே சண்டையை ஏற்படுத்த விரும்பாது பொறுமையாக இருந்தபடி தனது இரண்டாவது தங்கையைப் பார்த்து "என்ர அம்மா எல்லே பத்துமாக்காட்ட போய், அக்கா பின்னேரம் தாறாவாம் என்று சொல்லி முப்பது ரூபாவேண்டி சந்திக்கடையில காக்கிலோ சீனி வேண்டியாணை என்ர செல்லம்." என்று பணிவான தனது அன்புக் கட்டளையை இட்டாள். "யேய் ரெண்டு ஆர்.பி.ஜி பீடியும் வேண்டியாடி.... இல்லாட்டி முதுகுத்தோல் உரியும்" இது பொறுப்பேயற்ற அப்புண்ணியவானின் அதிகார மிடுக்கு.

தனக்கேயுரிய சிறிய பகுத்தறிவினாலும் தனது வயிற்றுப் புகைச்சலினாலும் பக்கத்து வீட்டில் காசு வேண்டி சீனியுடன் வந்தாள் இரண்டாவது தங்கை. எல்லோரும் தேநீரை குடித்தபடி தமது சிறிய பசியை ஆற்றிப் புகைக்கும் தமது வயிற்றுக்கு சிறிது ஆற்றல் கொடுத்தனர். வெறும் தேநீரை நிரப்பி சூப்பியிடப்பட்ட "மைலோ" வின் வெற்றுப் போத்தலின் உள்ளே விடப்பட்ட தேநீரை அண்ணாந்து ஆனந்தமாய் குடித்தது சுமதியின் கடைசித் தங்கை. சிறிய பிளாஸ்ரிக் போத்தலும் இல்லாவிட்டால் அந்த கிராமத்து அனேக விடுகளிலேயே தேநீர் போராட்டம்தான் நடந்திருக்கும். தானும் தன் தந்தையைப் போன்று உழைக்காது இருந்தால் இந்த நாளில் இருந்து இனிமேல் அடுப்பில் காளான் தான் முளைக்கப் போகிறது என்ற எண்ணத்துடன் அடுப்படியை விட்டு எழுந்தாள். குடும்ப நிலை ஏழ்மையாக இருந்தாலும் பாடசாலைக்கு உரிய ஒழுங்குடன் அழகுடனும் தன் தங்கைகளை வெளிக்கிடுத்தினாள் சுமதி.

அடுத்த கட்டம் தங்கைகள் வாய் திறக்க முன்பே தானே முந்திக் கொண்டு "என்ர செல்லங்கள் எல்லாம் ரீச்சரிட்ட சொல்லுங்கோ நாளைக்கு எப்படியும் கணிப்பீட்டு ரிப்போட் காசு தாறன்" என்று கூறிய அக்காவின் வார்த்தைகளை நம்பி காலை சாப்பாட்டையும் எதிர்பாராமல் பாடசாலைக்கு "அக்கா போய்ட்டு வாறம் என்ற அன்பான வார்த்தையுடன் புறப்பட்டனர். இவை யாவற்றையும் மதுவுக்கு அடிமையாகி மூளையும் மனமும் மரத்துப்போன தந்தை பார்த்தபடியே இருந்தான். பெறுவதுடன் தன் கடமை முடிந்து விட்டது என்று எண்ணிவிட்டான் போலும். அன்றைய தினம் தனது மனமும் உடலும் வேகமாக செயற்பட தனது வீட்டு வேலைகளை மளமளவென முடித்துவிட்டு வேலைக்குப் போவதற்காக ஆயத்தமானாள்.

வேலை என்றால் அரசாங்க உத்தியோகம் இல்லை. பக்கத்து வீட்டில பணிப்பெண்ணாக போய்த்தான் குடும்பத்தைப் பார்க்கிறாள். நேரத்துக்கு போகாவிட்டால் எஜமானியின் பேச்சு தாங்கேலாது என்று தான் என்னமோ கால் வேகமாக அசைய ஓடிஓடி சேர்ந்தாள். ஓடி வந்த களைப்பில் பெருமூச்சு விட்டபடி "அம்மா உயிரோடு இருந்திருந்தால் இவ்வளவு கஸ்டப்படத் தேவையில்லை." சுமதியின் தாயார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். இவ்வாறான மனவருத்தம் இருந்தாலும் தனது முதல் தங்கையை வைத்தியர் ஆக்கிடுவாள் என்ற நம்பிக்கையில் மனதைத் தேற்றிக் கொண்டாள். "யேய் என்னடி கனவு கண்டிட்டு இருக்கியோ இங்க அந்தப்படியே போட்டது போட்டபடியே பாத்திரங்கள். யார் உன்ட கொப்பரா வந்து கழுவுவார்." இது எஜமானியின் அதிகாரத் தொனி. நினைவு திரும்பிய சுமதி "ஆ...ஆ... வந்திட்டன் அம்மா இதோ சீக்கிரம் கழுவிறன்". சுமதி மளமளவென்று பாத்திரங்களைக் கழுவி வீட்டு வேலைகளையும் முடித்து விட்டு மதியம் 12.00 மணி இருக்கும் எஜமானி கொடுத்த இருநூறு ரூபாவை வாங்கிக் கொண்டு தங்கைமார் பள்ளிக்கூடத்தால வரப்போயினம் கெதியா சமைக்கனும் என்ற உணர்வோடு கடைக்கு சாமான்கள் வாங்கப் புறப்பட்டாள். வெய்யிலின்

கொடுமையால் தார் உருகி இப்போதுதான் புதுசாக வீதி எங்கும் தார் ஊற்றப்பட்டது போல வீதியெங்கும் இருக்க வெறும் காலை விட்டு வைக்குமா அந்த வெய்யில். அவளது விதிதான் அப்படி என்றால் வீதியும் அவளுக்கு ஏற்றமாதிரிதானே இருக்கிறது.

தார்கள் உருகி கால்களில் ஒட்ட ஒட்ட அந்த வலியையும் பொருட்படுத்தாது கடையை சென்றடைந்தாள். சுமதி தன்னிடம் இருக்கும் இருநூறுக்குள் சாமான்களை வாங்கி பொலித்தின் பையில் வாங்கி போட்டுவிட்டு வீடு திரும்ப ஆயத்த மானாள். அவள் எதிரே ஒரு குரல் "எடியே சுமதி" குரல் கேட்டு திரும்பிப்பார்த்தாள். அது வேற யாரும இல்லை பக்கத்து வீட்டு பாத்துமாக்கா என்ன பாத்துமாக்கா கூப்பிட் டீங்களா?" "ஓமடி உன்ட அதுதான் அருமைத் தங்கச்சி யாரோ பெடியன்ட மோட்டசைக்கில்ல ஏறி போறாளடி". தன்னு டைய தங்கச்சி அப்படிப்பட்டவள் கிடை யாது அவள் பள்ளிகூடம்தானே போனவள் என்று மனதில் எண்ணிக் கொண்டு

"உங்களுக்கு என்ன விசரே என்ட தங்கச்சி பள்ளிக்கூடம் எல்ல போய்டாள்"

"ம்..ம்.. பள்ளிக்கூடம்தான் போனவள் அதான் பள்ளிக்கூட உடுப்போட யாரோ பெடியன்ட மோட்ட வைக்கிலுல போற இலட்சணத்தை பாத்தன்தானே"

ஊர் கதை எண்டால் காணும் பத்துமாக்கு இதை விட்டு வைக்குமா.

பெரும் குழப்பத்தில் சுமதியின் கைகள் தளர்ந்து போக தலை சுற்றுமாப் போல் மனசு தள்ளாட "சீ..சீ.. இது உண்மையா இருக்காது" என அவள் மனசுக்கு சிறு ஆறுதல் கொடுத்தாள்.

இரண்டாவது தங்கை பாடசாலை முடிந்து தெருவில் வருகிறாள்.

"அக்கா இந்தா பிடி சின்னக்கா பேப்பரை உங்கிட்ட குடுக்கச் சொன்னா"என்ன என்று அறியும் ஆவலில் அவசரமாக அந்த பேப்பரை விரித்து படித்தாள் சுமதி.

"அக்கா என்னை மன்னித்துவிடு நான் எனக்கு பிடித்தவருடன் போகிறேன் அவரைத்தான் கல்யாணமும் செய்யப்போகிறேன் இதுதான் என் முடிவு அதில் எந்தவித மாற்றமும் இல்லை என்னை மன்னித்து விடு ஓகே குட் பாய்"

பேப்பரைப் படித்ததும் அவள் கையில் இருந்த சாமாங்கள் நிலத்தில் விழுந்து சிந்தியது அவள் அப்படியே கீழே இருந்து விட்டாள்.

இந்த குடும்ப கஸ்டத்திலும் தங்கையை டாக்டர் ஆக்கிப் பார்க்கணும் எண்ற கனவு வெய்யிலைக் கண்ட ஐஸ்கட்டி போன்று உருகியது அவள் மனம்

சில நிமிடங்கள் அவள் வாய் அடைத்து போய் வெட்கத்தில் தலைகுனிந்தாள். இதை உணரும் தன்மை மூன்றாவது தங்கைக்கு கிடையாது பள்ளிக்கூடத்தால் வந்த களையோ என்னவோ"அக்கா வாக்கா பசிக்குது"

அந்த பிஞ்சு குழந்தைக்கு பசியைத் தவிர அந்த நேரம் அதுக்கு எதுவும் தெரியவில்லை அக்காவின் கையை உலுப்பியது அந்த தங்கை. அந்த பிஞ்சு குழந்தையின் முகத்தை பார்த்த சுமதி உடனே எழும்பி தங்கையை கூட்டிக்கொண்டு வீட்டை சென்றடைந் தாள்.

வீட்டின் வாசலை சென்றடைய முன்னமே அடுத்த பேரிடி அவளுக்காக காத்திருந்தது.

வாசலில் வாகனம் ஒன்று நிற்பதை கண்டாள். என்ன வாகனம் என்று உற்று நோக்கினாள் சுமதி. "அது பொலிஸ் வாகனம்தான் ம்..... என்னண்டு பாப்பம்" என்று விரைவாக ஓடினாள்.

பொலிஸ் சண்முதகத்தோட வீடு இதுவா...."

சுமதி "அமாங்கையா அது எங்கட அப்பாதான் ஏன் என்ன விசயம்...." என பதற்றத்தோடு சுமதி கேட்டாள். " சண்முகம் குடிச்சிருக்கார் அதோட றோட்டால போறவையோட வம்பிழுத்து, ஒராளுடைய மண்டைய உடைச்சிருக்கார் அதால நாங்க

அவரை கைது செய்துள்ளோம் தண்டப் பணம் பத்தாயிரம் ரூபாவை கட்டிட்டு ஆளை கூட்டிடு போங்க...." என பொலிஸ் கூறிட்டு போய்ட்டார்.

"ஐயோ பத்து ரூபாக்கு படுர பாட்டுக்கு பத்தாயிரம் ரூபாக்கு நான் எங்க போவன் கடவுளே...." வாய்விட்டுக் குளறினாள் சுமதி.

**நீராவியடி**
**பா.யசிந்தா.**

எல்லோருடைய வாழ்கையிலும் எல்லாம் கிடைபதில்லை. சோதனைகள் என்பது. வாழ்கையில் வராதுதான் ஆனா வாழ்க் கையே சோதனை என்றால் எப்படித்தான் வாழுறது.

இவ்வாறுதான் "அவள் மனமும் மரத்துப் போனது"......

**"பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் ஆண், பெண் இருவருக்கும் சமபங்கு உண்டு"**

# மரணமா விடை?

சிற்றூர் கிராமத்தில் காதல் திருமணம் செய்து கொண்ட ராஜவுக்கும் மதிக்கும் பிறந்த கறுப்பு றோஜா தான் சாந்தி... அவள் நிறம் கூடவா நிஜமான வாழ்க்கையை நிர்ணயித்துவிட்டது. சாந்தியை தொடர்ந்து நான்கு வெள்ளை றோஜாக்களை பெற்றெடுத்தால் மதி. பிள்ளைகளைப் போலவே ராஜாவின் வாழ்வில் தொல்லைகளும் தொடர்ந்தது. என்ன சொல்ல சாந்தி கறுப்பு என்பதால் ராஜாவின் உறவுகள் எல்லோருமே அவளை கறுப்பு கறுப்பு என்று சிறுவயதிலேயே அவளை வெறுப்பேற்றி வந்தனர்.

மதியின் மாமியார் மோசமானவர். ராஜவை கிண்டிவிட்டு குடும்பத்தில் எப்பவுமே பிரச்சனையை துாண்டி விடுவதே வேலை. அப்பாவும் அம்மாவும் சண்டை பிடிக்கிறதைப் பார்த்து பார்த்து அப்பம்மாவிலே அதிக வெறுப்பு சாந்திக்கு. அப்பாவினுடைய உறவுகள் இவளுக்கு பிடிப்பதில்லை. அம்மா என்றால் அவளுக்கு ரொம்பவே இஸ்ரம். என்ன அம்மாவோட உறவுகளிடம் போனால் அவர்கள் அவளை அப்பாவோட அம்மா போல கட்டச்சி அவதான். அவளோட கையைப் பார், காலப்பார், நடையைப்பார், எல்லாமே அவதான் என்று சொல்வார்கள். பெரியவங்க ஏன் பேசுறாங்க என்று அந்த பிஞ்சுக்கு யோசிக்கவா தெரியும். நான் ஏன் கறுப்பாப் பிறந்தேன் தம்பி தங்கச்சி எல்லாம் வெள்ளையா இருக்கிறாங்களே என்று தனியாக யோசிப்பாள். அப்பம்மாவையே பிடிக்காத அவளுக்கு நான் அவாவப்போலவா அவா சண்டைக்காரி, பொல்லாதவாவே நான் அப்படியா என்று தனியா தன்னையே கேள்வி கேட்டு சிந்திப்பது வழக்கமாகி விட்டது. குழந்தை தானே கவனக்கலைப்பான்கள் கண்டதும். விளையாட ஆரம்பித்து விடுவாள். இப்படியே காலமோட சாந்திக்கு 12வயதும் ஆகி அவள் பெரிய மனுசியாகவும் மாறிவிட்டாள். அவள் கறுப்புத்தான் ஆனால் காரியக்காறி.

படிக்கிறதிலேயும் நல்ல ஆர்வம் ஆனால் அவள் செயற்பாடுகள் அவள் திறமைகளை காட்டிக் கொடுப்பதில்லை. அந்த மாமியாரால் ராஜா குடிகாரனாகி விதிவசமாக மதியின் குடும்பம் பிரிந்து மதி பிள்ளைகளுடன் தனிமைப்படுத்தப் பட்டாள். சாந்தி தாயை அதிகம் நேசித்தாள். இந்த சூழல் அவளை அதிகம் பாதித்துவிட்டது. பாடசாலையில் அவள் தகற்புக்காறி ஒவ்வொரு பாராட்டுக்களையும் மதியிடம் வந்து சொல்வாள். மதியும் தன் பிள்ளையை நினைத்து பெருமைப்பட்டுக் கொண்டாலும் சாந்தியைப் புகழ சந்தர்ப்பம் அமைந்ததே இல்லை. என்னடா நான் எவ்வளவு கேடயம், சான்றிதழ் வாங்கினாலும் அம்மா கண்டுக்கிறதே இல்லையே என்று ஒரு தவிப்பு சாந்திக்கு எப்பவுமே இருந்தது. அதை யாரும் பெரிதுபடுத்துவதில்லை.

மதியின் வறுமை நிலை காரணமாக கிராமத்தில் இருந்த சாந்தியை படிக்க வைக்க பட்டணத்தில் ஒரு பாதிரியின் உதவியுடன் ஒரு விடுதிக்கு மதியினுடைய தாய் அனுப்பினார். காலப்போக்கில் மதி சாந்திக்காகவே தானும் பட்டணத்திலேயே ஒரு வாடகை வீட்டில் வந்து வசித்தாள். 28 வயதிலேயே கணவனையும் இழந்து 5 பிள்ளைகளோடு கூலி வேலை செய்து சாப்பிட்டபோதும் என்றும் பிள்ளைகளுக்காகவே வாழ்ந்தாள். மதி சாந்தியையும் நல்லாப் படிக்கவைத்தாள். சாந்தி பாடசாலையில் முதலிடம் தான். யாரைப்பாத்தாலும் சாந்தி சாந்தி. ஆசிரியர்களில் இருந்து நண்பஉகள் வரைக்கும். விளையாட்டு, படிப்பு, போட்டி என்று சுற்றி சுழன்று பாடசாலையேயே கலக்கினாள். ஒவ்வொரு சாதனையிலும் பரிசு வாங்கும் போதும் சாந்தி அழுவாள். அந்த கண்ணீர் ஆனந்த கண்ணீர் என்று எல்லோரும் நினைப்பார்கள். எல்லோரும்

எனக்கு கை தட்டுறத பார்க்க அம்மா வரவில்லையே என்றுஏக்கத் துளிகள் என்று யாருக்கும் புரியாமல் போய்விட்டதே. சாந்திக்கு நிறைய நண்பர்கள் ஆசிரியர்கள் கூட அவளை கண்பெப்பதே இல்லை. இப்போது எல்லாம் இவளுக்குத்தான் கறுப்பு என்ற கவலையே இல்லை. தன் அழகை ரசிக்க ஆரம்பிச்சாள். தன்னைப்பற்றி எப்பவுமே பெருமையாகவே நினைத்தாள். நல்ல இதயம் இருப்பதாக பேசுவாள். வயசு வளர்வது போலவே ஆளும் வளர்ந்தாள். தன்னை விட்டால் யாருமில்லை என்று துள்ளி விளையாடி கடந்த காலத்தை மறந்து மகிழ்ந்து சிரித்த சாந்தியின் வாழ்க்கையில் இப்படி ஒரு நிசப்தமான திருப்பம்....

மதியைப்பற்றி யாரும் கதைத்தாங்களோ? சாந்தி பொம்பிளைப்பிள்ளையா என்று சந்தேகப்படுகிற அளவு அவங்களோட போரடத் தொடங்கிடுவாள். வார்த்தையாளேயே மடக்கிடுவாள். அம்மாதான் அவளுடைய ஆதாரம். அம்மாவைத்தான் அவள் சுவாசமா நினைத்தாள். நகரத்தில் கூலி வேலை செய்து வாழ்வது கஸ்ரம். மதியிடம் கேட்டால் தெரியும். கூலி வாங் கும் இடத்தில் மானத்தை காப்பாற்ற பல தடவை பல போராட்டங்ளை போராடி இருப்பாள். அவைகளை சில நேரங்களில் சாந்தியிடமும் சொல்லியிருந்தால். மதியில் அதிக அன்பு வைத்ததால் அவளை நிறைய நம்பினாள் சாந்தி.

கண் இல்லாவிட்டாலும் பொண்ணு என்று நினைக்கிற சில கீழ் தரமான ஆண் வர்க்கம் அலைந்து திரிகிற ஜாதிதான் குணம். பிள்ளைக்கு தாய் என்றால் என்ன பார்க்க சுமாராக இருந்த மதியை எப்படியோ தன் வழியில் விழுத்திவிட்டான். மதி கூலி வேலை செய்யும் இடத்திற்கு சென்று மந்திர தந்திரம் செய்து இந்த நல்ல மனசில் நஞ்சை விதைத்தான். 30 வயது கூட முடியாத மதி கணவன் உறவுகள் இன்றி யார் தனக்கு உதவுவார் என்றும் ஆறுதல் இன்றி அன்புக்கு ஏங்கிய அவளுடைய வாழ்க்கையில் எப்படியோ உரிமையை பெற்றுக் கொண்டாள்.

தன்னையும் மீறி தன்னையும் குணத் திடம் இழந்து போனதை மதி சாந்தியிடம் மறைத்தாள். நாட்கள் போகப் போக விடுதியில் இருந்த சாந்தியிடம் பலர் மதியைப்பற்றி அவதூறு கதைக்க தொடங்கினார்கள். விடுவாளா சாந்தி உண்மையை அறியாத அவள் ஆவேசப்பட்டு அனேக பேரை பகைத்துக்கொண்டாள். சாந்தியின் மனதை கிழிப்பது போல அந்த குணம் மதியை சாந்தியிடம் இருந்து பிரித்து விட்டான். சுத்தி அழுதாள். ஆறு, கடல், வானம், பூமி எந்த இயற்கையாலும் முடியவில்லை சாந்திக்கு சமாதானம் சொல்ல. இதயம் வெடிக்க என்ன செய்வது தெரியாமல் ஏங்கிப்போனாள், தனிமைப்படுத்தப் பட்டாள்.

நண்பர்களும் ஆசிரியர்களும் அவளை கைவிடவில்லை. துடிப்பிழந்து சோர்ந்து போன சாந்திக்கு வார்த்தையால் மீண்டும் உரமூட்டினார்கள். படிக்க உதவி செய்தனர். எது எப்படியோ சாதிக்கின்ற வெறியை அவளுக்கு கொடுத்தனர். சாந்தி படித்தாள். பல்கலைக்கழகமும் போனாள். அவளும் வளர வயதும் வளர தனிமை அவளை தொடர்ந்து கொண்டே இருந்தது. இந்த நாட்களில் அவள் தனது சிறுவயது நினைப்புக்களை கிளறத் தொடங்கினாள். யாரால் எனக்கு இப்படி, அப்பாவாலதானே, அப்பம்மாவால் தான் யோசித்த அவளுக்கு தான் கறுப்பு அப்பம்மாவைப் போல குணமா என சிந்திக்க ஆரம்பித்தாள். மீண்டும் கசப்புகள்.... இந்த நாட்களில் நண்பர்களை எத்தனை நாள் தொந்தரவு செய்வது என சிந்தித்தாள். வேலைகளை தேடினால் அவள் செய்த அதிஸ்டமோ என்னவோ அன்பான உறவு அம்மா அப்பா மூன்று அக்காமார் எல்லாரும் கிடைத்தார்கள். நினைத் துப் பார்க்க முடியாத அளவு சாந்தியை தூக்கி வைத்து பார்த்தார்கள். யார் எப்படியோ சாந்தி அன்புக்கு ஏங்கினாள். ஆனால் அவளால் ஏமாற்றத்தையோ இழப்பையோ தாங்கும் மனநிலை இருக்கவில்லை. தன் நம்பிக்கை இழந்தவளாய் சோர்வாகவே

இருப்பாள். பிறர் முன் தன்னை காட்டிக் கொள்ளா விட்டாலும் தனிமையால் பேசிக் கொள்வாள். தன்னைப்பற்றி குறைவாக நினைக்காவிட்டாலும் தான் ஒரு அதிஸ்டம் இல்லாதவள் என நினைத்துக்கொள்வாள். சாந்தி, வாழ்க்கையில் தான் நேசித்தவர்கள் துரோகம் செய்ததை மறக்க முடியவில்லை. அடிமேல் அடிபட்டு ரணப்பட்டு போன உள்ளத்தை அவள் வெளியாக காட்டாமல் இருக்க முகம் நிறைஞ்ச சிரிப்பும், வாய் நிறைஞ்ச பேச்சும் எப்போதும் அவள் கூட வே இருக்கும். அந்த சூழல் அவளை நிறையவே மாற்றிவிட்டது. சாந்தி தன்னைப் பாதுகாக்க ஒரு ஆணைப்போல் தன்னை மாற்றிக் கொண்டாள். உருவத்தையும் செயலையும் மாற்றிக் கொண்ட சாந்திக்கு உள்ளத்தை அப்படி மாற்ற முடியாமல் போயிற்று.

அந்த குடும்பத்தில் அவளை தூக்கி வைத்தார்கள், பாராட்டினார்கள், அதிகமாக நேசித்தார்கள் என்று நம்பினாள். சில வேலை அவர்கள் ஏதேனும் சொல்லிவிட்டால் சாந்தி யால் தாங்க முடியாது. அவர்கள் சில வேளை இவள் ஆம்பிளை போல அப்படி இப்படி என்று சொல்லுவார்கள். அவள் நன்றாக கவிதை எழுதுவாள். அந்தத் திறமையை பாராட்டாமல் அவள் சித்திரம் தானே நல்லாக பொய் சொல்லுவாள். அதுதான் கவிதை எழுதுகிறாள் என்று அவமதிப்பார் கள். அவர்கள் பகிடியாக பேசுவார்கள். ஆனால் சாந்தியால் தாங்க முடியாது. தான் கறுப்பு என்று தொடங்கிய அந்தப் பட்டியல் இதையும் சேர்த்து தனியாக கேள்வி கேட்க ஆரம்பிப்பாள். இப்படி அவள் செய்த ஒவ்வொன்றையும் குறைகான ஆரம்பித்தார் கள். உடையில் இருந்து நடை மட்டும். பல்கலைக்கழகம் விடுமுறை என்றால் சந்தோ சமாக வருவாள் கண்ணீரோடு திரும்பிப் போவாள். காலம் செய்த சதியோ தெரிய வில்லை. அந்த அன்பான உறவுகளும் சாந்தியை கைவிட்டார்கள். அந்த குடும்பத் தில் கடைசி சகோதரி மட்டும் சாந்தி மீது நேசம் கொண்டாள். அவளுக்காகவாவது துன்பங்களை தாங்கிக் கொள்ளுவோம் என்று சாந்தி பொறுமையாக இருந்தாள். இப்படியே தொடர அவளை அறியாமலே அவளுக்கு நான் ஏன் வாழ்கிறேன். நான் என்ன அழகா கறுப்புதானே எரிச்சல், பொறாமை தனக்குள்ளே இருப்பதாக நினைத்தாள். சாதரணமாக அவளால் இருக்கவே முடியவில்லை. எல்லாம் அவளு க்கு குறையாக இருந்தது. ஏமாற்றம், தட்டிக் கழிப்பு. பல்கலைக்கழகத்தில் படிக்கிறவள் என்று தான் மற்றவர்களுக்கு தெரியும். அவள் மனசுக்குள் தனியாக விடை காணாத வினாக்களோடு அவள் போராடி சோர்ந்து போனது யாருக்கும் தெரியாது. இப்போது அவள் பழைய சாந்தி இல்லை. அவளால் படிக்க முடியவில்லை. அதற்கு ஏற்றால் போல இவளை தூக்கி கதைக்கிறதோ இல்லை. பாராட்டுவதே இல்லை. மனசும் தானும் தனிமையும் என்று தன்னை வெறுக்க ஆரம்பித்தாள். ஏன் என்ற கேள்வி அவளை விரட்ட ஆரம்பித்தது.

**"ஆண்களிடம் உருவாகும் இயலாமையும் குறைபாடும் பெண்கள் மீதான அடக்குமுறை அதிகாரமாக மாறுகின்றது"**

# பெண் என்பதால்

வயதோ பதினெட்டு
கல்வி பயிலும் வயதில்
கல்யாணம் என்னும் பெயரில்
வந்ததே வரன் ஒன்று
யார் என்று தெரியாது
முகவரிவும் தெரியாது-ஆனால்
வெளிநாட்டு மாப்பிள்ளையாம்
திடிரென கோவில் ஒன்றில்
திருமணமும் நடந்தது
சுமை குறைந்தது என
சுகம் அடைந்தோர் சிலர்
பெருமைப்பட்டோர் சிலர்
பெருமூச்சு விட்டோர் சிலர்
கண்ணில் கனவுகளை
காற்றில் பறக்கவிட்டு
கால்கள் கட்டுண்டு போனது
அவளது வாழ்க்கை
நாட்கள் நகர்ந்தனவே
தபால்க்காரன் வாசலிலே
தந்தியுடன் நிற்கிறான்
"மாப்பிள்ளைக்கு.......
ஈர்ரைந்து மனைவியாம்"
வாழ்த்தினோர் புகழ்ந்தோர்
வாய் அடைத்துப் போய் நிற்க
வாழ்க்கை என்னும்
நாடகமும் முடிந்ததுவே
அவள் "பெண்" என்பதால்
மௌனமாய் நிற்கின்றாள்
பெரிய கதையினை புனைகின்றனர்
பெருமையாக அவளை வைத்து

பா.யசிந்தா

# அன்னையவள்

ஐயிரு திங்கள் சுமந்து
அறுசுவை யேதுமின்றி
அமய்யினில் நோவும் பட்டு
மேதினியில் பெற்றாள் அன்னை
பகலிரவாயுறக்கமின்றிப்
பாடுபட்டு வளர்த்தாள் அன்னை
அகமதில் அன்பு காட்டி
அறுசுவையும் தந்தாள் அன்னை

நோயினால் அவஸ்தைப்பட்டு
நொந்திட்ட வேளை தன்னில்
மெய்யினில் நடுக்கம் கொள்ள
மார்போடு அணைத்தால் அன்னை
வைத்தியர் வீடு சென்று
வணங்கியே மருந்தும் வாங்கி
பத்தியம் காத்து நல்ல
பரிகாரம் செய்தாள் அன்னை

பள்ளியில் படிக்க வைத்துப்
பண்டிதனாக்க வெண்ணி
உளமதில் உவகை கொண்டு
உண்மையாய் உழைத்தாள் அன்னை

புவியினில் வாழும் உயிர்கள்
பற்பல கோடிகட்கும்
அவனியில் அன்பு காட்டும்
அருளிசைத் தெய்வம் அன்னை

நகம் வலிக்கும் போது
அகம் வலிக்கும் அன்னை
திசை மாறிய போதும்
இசைந்து வாழும் அன்னை
உசிதமான சொல்லால்
உயிர் கொடுக்கும் அன்னை
பகைமை யின்றி வாழ
தகைமை சேர்க்கும் அன்னை

கண்ணுக்குள் இமை போலக்
காத்து வளர்க்கும் அன்னையை
மண்வக்குளா தீர் பலவும்
மகழ்ந் தளித்துப் பேணுவோம்
விண்ணும் மண்ணும் போற்றவே
விவேகம் தன்னைக் கூட்டவே
புன்னகை கொண்டு அன்னையைப்
பொலிவுடன் வாழ வாழ்த்திடுவோம்.

**ஜெயம் கிறிஸ்துராசா**
**புதுக்குடியிருப்பு**

> **"தமது குடும்பத்தை திட்டமிடும் வகிபங்கு**
> **அனைத்துப் பெண்களுக்கும் உண்டு"**

# பாசத்தின் படலம்

பாசத்தை முதலில்
பட்டியல் இட்டுக் காட்டியவள்
பாலகரைத் தொட்டிலில் ஆட்டியவள்
பசித்தாலும் தன் பிள்ளைக்குப் பாலுட்டியவள்

பண்பையும் அன்பையும் மாலையாய்ச் சூட்டியவள்
படைத்தவன் தரத்தில் தாய் என்று நிலைநாட்டியவள்
பந்தத்தைத் தொப்புள் கொடியுடன் மூட்டியவள்
பச்சிளத்திற்கு பாதகம் வந்தால்
பாய்ந்திடும் ஈட்டியவள்
படாத பாடுபட்டு உறவைக் கூட்டியவள்
பகுப்பாய் பார்த்தால் இந்த வாழ்க்கைப்
பாதையை ஓட்டியவள்
அவள்தான் தாய் - அவளைப்
புகழப் போதாது இந்த வாய்

**ஜெயர் ஜெகன்**
**புதுக்குடியிருப்பு**

"ஆண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் சுதந்திரங்களும்
அனுபவிக்கும் உரிமை பெண்களுக்கும் உண்டு"

# காற்றில் உடைந்த இசைப்பறவை

ஒரு நீர் வெளியின் சேற்றுப்புதர் மேல்
காற்று உடைத்த இசை நிர்வாணம் விரித்து
வன்மம் குறி கொண்டு நிழலை வதைக்கிறது.

எங்கும் விரவிக் கிடக்கின்றது துயரின் படலம்
எவ்வித குற்றமற்ற பறவை வனத்தின் வாழ்விற்காக
மெல்லிய குரலிலிருந்து வான்வெளியின்
காற்றில் பூக்களின் மென்மையில்
செய்திகளையும் பாடல்களையும்
சொற்களிலிருந்து அமைதி திளைக்க இசைத்தது.

அழகிய நிறமுடைய இசைப்பறவை தனது
மொழி விகாரம் புரிந்து கொள்ள முடியாத
காடு மிதித்த வேட்டைக்காரன் பறவையின்
உடலில் காம வெறியில் சுட்டுக் கொன்றான்.

தொலைவில் இன்னும் பறவைகள்
கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
சர்ப்பங்களாய் உள்ளிறங்கும் கொலை அரசன்
அழுகையின் ஒலிகளை புன்னகையால் அளவிட்டு
ரசித்துக்கொண்டிருக்கின்றான்.
அசையும்உடலிலிருந்து எழுகின்றது
துயரின் பெரும் கண்ணீர்த் துளி அடையாளம்
தவறிய மோனத்தில் தவறு இழைக்கின்றது காலம்.

மரணம் நிறைகின்ற ஒரு அங்குல நிலத்தில்
துடிதுடிக்கும் உயிர்களின் ஓசை கரைந்து
கொல்லப்பட்டிருக்கும் உடலினை மேய்கிறது
நூற்றாண்டு தின்று கழித்த மிருகத்தின் வக்கிரம்.

கோ.நா

# பேசாப் பொருள் பேசும் பொருளாகியது.....

பாலியல் தொடர்பான விடயங்கள், வெட்கப்படக் கூடிய விடயமாகவும், அவைபற்றி பேசுவதெல்லாம் பிரத்தியேக மானவை என்ற கட்டுக்கோப்பு அன்று இருந்தது. இதனால் பாலியல் தொடர்பான விடயங்கள் பற்றிய ஆழமான ஆய்வுகளோ, வெளிப்பாடுகளோ வெளிப்படுவதற்குரிய ஆதாரங்கள் அருமையாகவே இருந்தன. பல சம்பவங்கள் மறுக்கப்பட்டுமே இருந்து வந்துள்ளன. ஆயினும், இன்றைய நிலை அக்போக்கையே மாற்றியமைத்துள்ளது. மருத்துவ வசதிகளின் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக, பெண்கள் கருத்தரித்தல், பிரசவம் தொடர்பான தகவல்கள் மற்றும் பாலியல் நோய்களின் புதிய வரவுகள் போன்ற தகவல்கள் மக்களை விழிப்படையச் செய்துள்ளன என்பது உண்மையே. இவை எல்லாவற்றையும் நாம் கணக்கில் எடுக்காது, பாலியல் வல்லுறவு என்பதனை மட்டும் துருவித்துருவிப் பார்க்கின்றோம். ஏன் என்ற கேள்வி எம் எல்லோர் மனதிலும் பயத்துடன் கூடிய ஓர் அச்சத்தை ஏற்படுத்துகின்றது. பாலியல் உறவு என்பது எவ்வளவு புனிதமானது. அதனைக் கொச்சைப்படுத்தி, களங்கங்களை சுமத்தி சமூகத்தில் வேண்டாத, தண்டனைக்குரிய குற்றமாக்கிய பொறுப்பு யாருடையது? பாலியல் வல்லுறவு சம்பவங்கள் இன்று மிக வேகமாக உயர்ந்து வருவது எமது நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் இடம்பெற்று வருவதனை பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண் உரிமை பற்றிப் பேசுவோர், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் என சமூகத்தின் பல மட்டத்திலும் பாலியல் வல்லுறவு ஓர் சமூக சீர்கேடு என்று குரல் கொடுக்கின்றனர். பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவதாக நாம், நாட்டைவிட்டு ஓடினாலும் அங்கேயும் இதுதானே நடக்கின்றது. இந்தியாவில் புதுடெல்லியில், மருதுவத்துறை மாணவிக்கு நடந்த பாலியல் வல்லுறவுச் சம்பவம் உலகையே ஒரு கணம் ஸ்தம்பிக்க வைத்ததை நாம் மறந்துவிடலாகாது.

இலங்கையில் வீட்டு வன்முறை ஒழிப்புச் சட்டம் 2005 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுகின்றது. பாலியற் குற்றம் புரிவோருக்கு தண்டனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தளர்வுகள் எட்டப்படவில்லை. இவற்றிற்கான காரணங்கள் நாட்டிற்கு நாடு வேறுபடுபவையாக உள. கீழைத்தேச பாரம்பரிய கலாசார இறுக்கங்களை உள்ளடக்கிய சமூகங்களைக் கொண்ட நாடுகளுள் இலங்கையும் ஒன்று. தவிர தமிழ் மக்களிடையே மேலும் சில இறுக்கமான சமூக கட்டுப்பாடுகள் காலாகாலமாக இருந்து வந்துள்ளது. இக்கட்டுப்பாடுகள் மெல்ல மெல்ல தளர்ந்துவிட்டன. இத்தளர்வுக்கான காரணங்கள் யாவை என சமூகவியலாளர்கள் பல காரங்களை முன்வைக்கின்றனர். இவை எப்படியிருந்த போதிலும், அபிவிருத்தியின் பங்காளியாக செயற்பட்டவரும் தொழில்நுட்ப புரட்சியின் தாக்கங்கள் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இவை பெண்களாக இளவயதினராக அல்லது முதியோராக இருந்தால் கூட அவர்களைத் தட்டிப் பார்த்தே சென்றுள்ளது. இதற்காக தொழில்நுட்ப மாற்றங்களை ஒதுக்கிவிட முடியுமா? நாம் காரணங்களை வலிந்து கண்டுபிடிக்க முயற்சித்தால் பல காரணங்கள் எம் கண் முன் வந்து நிற்கின்றன. பாலியல் வல்லுறவு, தவறானது, ஓர் பாரதூரமான தண்டணைக்குரிய குற்றம் என்பது தெரிந்த விடயம்தான். ஆனாலும் இவை சமூகத்தில் இடம்பெறாமல் இல்லை. குடும்ப உறவுகளின் எல்லை தாண்டி, சமூகத்தின் கட்டுக் கோப்புக்களை உடைத்து எங்கோ சென்றுகொண்டிருக்கின்றது. ஓர்

பெண்ணைப் பழிவாங்க வேண்டும் என்று நினைப்பவர்கள் கூட பாலியல் வல்லுறவை ஓர் ஆயுதமாக எடுத்துக்கொள்கின்றனர். இளம் வயதில் காதலிப்பவர்கள் பின்னர் மனம் மாறி, ஏமாற்றப்பட்டவரை பழிவாங்க நினைப்பதும் அவளை எப்படியாவது பாலியல் வல்லுறவிற்குட்படுத்தி மான பங்கப்படுத்வதும் பல சந்தர்ப்பங்களில் நமக்கு செய்தியாக கிடைக்கின்றன. காதலிப்பது, ஆண், பெண் இருவரும்தான். பெண் மட்டும் ஏன் பழிவாங்கப்படுகின்றாள்? இதே நிலை பெண்ணிற்கு ஏற்படும் போது அவளிடம் ஆணைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றுவதில்லை? காதலில் கூட பெண் அடிமைப்பட்டவளாகத்தான கணிக்கப்படுகின்றாள். பாலியல் வல்லுறவு மற்றும் பாலியற் தொல்லைகளை குறைப்பதற்கு, எடுக்கப்படும் முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் தொல்லைகள் இன்று நெருங்கிய குடும்ப உறவினர்களாலும் ஏற்படுத்தப்படுகின்றன. குடும்பத்தை எட்டிப்பார்க்கவோ, தட்டிக்கேட்கவோ முடியாதுள்ளது. இச்சம்பவங்கள் முறையாக பதிவு செய்யப்படும் போதே விசாரணைகளை ஆரம்பிக்க முடியும் தண்டனைகளும் அவ்வாறே.

மற்றும் தொழில் பார்க்கும் பல இடங்களில் சில அதிகாரிகளினாலும் பாலியல் தொல்லைகள் பாலியல் தொல்லைகட்கு ஆளாகும் பெண்கள் கூட அவற்றை முறையாக வெளியிடுவதற்கு தயங்குகின்றனர். இதனால் தமது தொழில் நிலைகளில் பாதிப்புக்கள் ஏற்படும் என்ற பயம் ஓர் காரணமாக இருக்கலாம். இப்படியாக சமூகத்தின் பல மட்டங்களிலும் சிறுமியரில் தொடங்கி இளம் பெண்கள் என தொடர்ந்து செல்லும் இக் பாலியல் வல்லுறவு கொடுமை, சமூகத்திலிருந்து ஒழிதல் வேண்டும் ,சட்டங்கள் தன்டனைகட்கு அப்பால் பெண்களை கௌரவமாக மதித்து நடக்கக்கூடிய மென்மையான சமூகம் ஒன்றை வளர்த்தெடுக்க வேண்டும் கடப்பாடு எம் எல்லோருக்கும் உண்டு.

**சறோஜா சிவசந்திரன்**

> **“பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாது ஒழிப்போம்”**

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகள்

மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்கள் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக 2013ஆம் ஆண்டில் வன்னிப் பிரதேசத்தில் மீள்குடியேறிய குடும்பங்கள், பெண் தலைமைதாங்கும் குடும்பங்களை இலக்காக கொண்டு பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

## ஆய்வு நூல் வெளியீடு

மீள் குடியேறிய மக்களுக்கு குறிப்பாக பெண்கள் தனியாக குடும்பப்பாரத்தை சுமக்கும் குடும்பங்களுக்கு, காணியை மீளப் பெற்றுக்கொள்வதில் பல பிரச்சனைகள் உள்ளமை ஆராயப்பட்டுள்ளது. ஆகவே எமது நிறுவனம் வடமாகாணத்தில் காணி தொடர்பான பிரச்சினைகளை மையப்படுத்திய ஓர் கள ஆய்வினை மேற்கொண்டு சேகரிக்கப்பட்ட தரவுகளைத் தொகுத்து "வடமாகாணத்தில் காணி உரிமைகளும் பெண்களும்" என்ற தலைப்பில் ஓர் நூலை வெளியிட்டுள்ளது.

இந்நூல் இளைப்பாறிய வடமாகாண காணி ஆணையாளர் திரு.கே.குருநாதன் வளவாளராக நெறிப்படுத்திய கருத்தரங்கு தகவல்களையும் உள்ளடக்கியுள்ளது. காணி தொடர்பில் பல தகவல்களையும் உள்ளடக்கிய இந்நூலினை வடமாகாண காணி ஆணையாளர் திரு. கே.மகேஸ்வரன் 30.10. 2013 அன்று வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தார்.




மகேஸ்வரன் வடமாகாண காணி ஆணையாளர் நூலை வெளியிட்டு வைத்தல்.

"வடமாகாணத்தில் காணி உரிமைகளும் பெண்களும்" என்ற பயனுள்ள நூல், காணி தொடர்பான பிரச்சினைகளை எதிர் நோக்கும் மக்களிடம் மட்டுமன்றி காணி தொடர்பாக தீர்மானங்களை எடுக்கும் அதிகாரிகள் மட்டத்திலும் சென்றடைய வேண்டும் என்ற ரீதியில் இந்நூலினை முதன் முதலாக வடமாகாண சபையினை பொறுப் பேற்று முதலமைச்சராக பதவியேற்றிருக்கும் திரு.சி.வி.விக்னேஸ்வரன் அவர்களிடமும் வடமாகாணசபை அமைச்சர்கள் அங்கத்த வர்களிடமும் இந்நூலின் பிரதிகளை மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் நேரில் சென்று கையளித்தார்.




"வடமாகாணத்தில் காணி உரிமைகளும் பெண்களும்" நூலினை முதலமைச்சர் மாகாணசபை உறுப்பினர்களிடமும் கையளித்தல்.

## நூல் வெளியீடு

### "வடமாகாணத்தில் பெண்தலைமைத்துவ குடும்பங்கள்"

போர் முடிந்து விட்டது என்று கூறப் பட்ட போதிலும், அதனைத் தொடர்ந்து சமூகமட்டத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளது. போரின் போதும் போர் நடைபெற்றிருந்த காலங்களிலும் தமது கணவன்மார், பிள்ளைகளை இழந்த குடும்பங்கள் பலர் இன்று தமது வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். மற்றும் கணவன் பிள்ளைகள் காணாமற்போன நிலையில் அவர்கள் எங்கு உள்ளார்கள் என்ற நிலையில் அவலப்படும் குடும்பங்களும் இன்று தமது வாழ்வாதாரத்திற்காக ஏங்கிக் கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் தொடர்பான விபரங்கள் தரவுகள் ஆங்காங்கே தேவைகளுக்காக பெறப்பட்டிருந்த போதிலும் சரியாக எண்ணிக்கையிடப்பட்ட தரவுகள் கிடைப்பதில், பல வாழ்வாதாரத் திட்டங்களை செயற்படுத்தும் நிறுவனங்கள் தடுமாறியுள்ளதை அறிய முடிகின்றது. ஆகவே மகளிர் அபிவிருத்தி நிலையம் இவ்வாறான தேவை உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களின் விபரங்கள், தரவுகளை பிரதேச செயலகங்கள் மற்றும் களஆய்வு மூலம் பெற்று தொகுப்பாக ஓர் கள ஆய்வு நூலை வெளியிட்டுள்ளது. இவ்வாய்வு நூல் பெண்தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பாக திட்டங்கள், வாழ்வாதார உதவிகள், வலையமைப்புக்களை உருவாக்கும் நிறுவனங்களுக்கு உதவியான ஓர் நூலாக அமைகின்றது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் நிறுவனத்தில் உண்டு.

இவ்வாய்வு நூலை செல்வி உதயணி நவரட்ணம், மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் யாழ்ப்பாண செயலகம், அவர்கள் 30.10.2013 வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தார்.





உதயணி நவரட்ணம், மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் யாழ்ப்பாண செயலகம், அவர்கள் இந்நூலினை வெளியிட்டு வைத்தார்.

**பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வலையமைப்பு:**

மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் விபரங்கள், தரவுகள் சேகரித்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. இவ்வாறாக சோர்வடைந்துள்ள பெண்களை பயிற்சி கொடுத்து, வலுவூட்டி அவர்களை சமூகத்தில் முக்கிய பங்குதாரர்களாக மாற்றுவதிலும் அக்கறையுடன் செயற்படுகின்றது. இவ்வாறு வாழ்வாதார வசதிகளை இழந்தவர்கட்கு வாழ்வாதார உதவிகளுடன் பயிற்சிகளையும் எமது நிலையம் வழங்கி வருகின்றது. இச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதோடு, பெண்களை குழுக்களாக அணிதிரட்டி ஓர் வலையமைப்பும் உருவாக்கியுள்ளோம். இச் செயற்பாடுகள் அப்பெண்கள் பல நிறுவனங்களோடு இணைந்து செயற்படக்கூடிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியுள்ளது.



புதுக்குடியிருப்பு



மாங்குளம்

## பெண் தலைமைத்துவ குடும்பங்களின் குழுக்கள்

### சமாதான செயற்பாட்டுக் குழு:

தேசிய சமாதானப் பேரவையின் ஐரோப்பிய ஒன்றிய திட்டத்தின் கீழ், பங்குதாரர்களாக செயற்பட்டு மாவட்ட ரீதியில் சமாதான செயற்பாட்டுக் குழுக் களை மகளிர் அபிவிருத்தி நிலையம் அமைத்துள்ளது. இம்மாவட்ட சமாதான குழுக்களில் சிவில் சமூக அங்கத்தவர்கள், சமயத்தலைவர்கள் அங்கத்தவராக உள்ள னர். இவர்கள் ஊடாக மாவட்ட ரீதியில் பிரச்சனைகளை இனம் கண்டு அவற்றை சமாதான முறையில் தீர்ப்பதற்கான வழி முறைகளையும் சமூகமட்டத்தில் ஆராய் வதே இக்குழுக்களின் பிரதான நோக்காகும்.



மாவட்ட சமாதானக்குழு-யாழ் மாவட்டம்

### மாவட்ட குழுக்களின் வெளிக்கள விஜயம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கும் சமாதானக் குழுக்களும் ஏனைய மாவட்ட குழுக்களை சந்தித்து அவ்வவ் மாவட்ட ங்களின் சிறப்பான பிரச்சினைகளை ஆராயும் நடவடிக்கைகளையும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து சமாதானக்குழு புத்தளம், அம்பாந்தோட்டை சமாதானக் குழுக்களை சந்திக்க ஏற்பாடு செய்யப் பட்டது. புத்தளம், அம்பாறை, மொனரா கலை பிரதேசக் குழுக்கள் யாழ்ப்பாணக் குழுக்களை சந்தித்தமையும் குறிப்பிடத் தக்கது.



யாழ்ப்பாணம்



புத்தளம்




அம்பாந்தோட்டை

## மாவட்டக் குழு சந்திப்புக்கள்

### பெண்களுக்கெதிரான வன்முறை ஒழித்தல்

மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்களை ஒழித்தல் தொடர்பான நடவடிக்கைகள், விழிப்புணர்வு கருத்தரங்குகள், பிரசார நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதுடன் பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் இலவச சட்ட ஆலோசனைப் பிரிவையும் சட்டத் தரணிகளின் உதவியோடு நடாத்தி வருகின்றது. இவ்வருடத்தின் பிரசார நடவடிக்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) அனுசரனையுடன் மாறுபட்ட முறையில் ஓர் பிரசார நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. அதாவது யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற பாலியல் வன்முறைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு நான்கு அசைவுச் சித்திரங்கள் இரு குறும் படங்களின் ஊடாக விழிப்புணர்வு செயற்பாட்டினையும் இறுவட்டுக்களின் மூலம் பதிவு செய்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் காணொளியாக காண்பித்து வருகின்றது.

இதில் சிவில் சமூகத்தவர்கள் ஏராளமானோர் பங்குபற்றி, பார்ப் பதன் மூலம் எமது செய்தி மக்கள் மத்தியில் ஆழமாகப் பரவுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம். கானல், சருகு ஆகிய இரு குறும்படங்கள் ஓர் எச்சரிக்கை விழிப்புணர்வு நோக்கோடு யாழில் தயாரிக்கபட்ட ஆவணப்படங்களாகும். இத்துடன் 1500 இறுவட்டுக்களில் இவற்றை பதிவு செய்து சமூக மட்டத்தில் வழங்குவதற்கும் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்து வருகின்றது.








சசிதரன் அனந்தி வடமாகாணசபை உறுப்பினர் அவர்களால் 28.10.2013 அன்று இறுவட்டை வெளியிட்டு வைத்தார்.

## போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள்

ஆசிய நிதி நிறுவனத்தின் உதவியுடன் போரில் பாதிக்கப்பட்ட கணவன், பிள்ளைகளை இழைந்து "சாந்திகம்" நிறுவனத்தில் உளவள ஆலோசனை பெற்று வந்த 25 பெண்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலைய உளவள ஆற்றுப்படுத்தலோடு வாழ்வாதார உதவிகளையும் செய்துள்ளது. இவர்களுக்கு தமது வாழ்வாதார உதவிகள் மூலம் வருமானத்தை உயர்த்திக் கொள்ளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது. தும்புத் தொழில், சிறு வியாபாரம், தையல் போன்ற சிறு தொழில்கள் மூலம் இவர்கள் தமது வாழ்க்கைக்குரிய வருமானத்தை பெறுகின்றமை குறிப்பிடத் தக்கது.



தையல் இயந்திரம் சாவகச்சேரி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு வழங்கப்பட்டது.



கொழும்புத்துறை பிரதேசத்தில் உள்ள பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு தும்பு மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டது.



உடுவில் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு ஆடு ஒன்று வழங்கப் பட்டது.



சாவகச்சேரி பிரதேசத்தில் பாதிக்கப் பட்ட பெண் ஒருவருக்கு மாடு வழங்கப் பட்டது.

**பற்றிக் பிறிண்டிங் பயிற்சி**

மகளிர் அபிவிருத்தி நிலையம் இளம் பெண்கள் மத்தியில் கவர்ச்சிகரமான தொழில்வாய்ப்புத்துறையாக பற்றிக் வேலைப்பாடுகளோடு கூடிய பயிற்சிகளை பல கிராமமட்ட பெண்களுக்கு வழங்கி வருவதோடு, அவர்கள் சுயமாக இத்தொழிலில் ஈடுபடும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது. சில குழுக்கள் தாம் தயாரித்த பற்றிக் துணிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர்.






பற்றிக் துணி தயாரித்தல்
வேலணை , ஆனைக்கோட்டை

### வீட்டுத் தோட்டச் செய்கை

போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றம் இடம் பெற்று வரும் போது, குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி தமது வாழ்வாதார தேவைகட்காக சிறு சிறு முயற்சிகளில் ஈடுபட முன்வந்தனர். இவ்வகையில் பெண்கள் தமது குடும்ப தேவைகளுக்காக வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட முயற்சிகள் மேற்கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு ஊக்குவிக்கும் வகையில் மகளிர் அபிவிருத்தி நிலையம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் மீள் குடியேறிய குடும்பங்களுக்கும், பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கும் அவர்கள் வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மரக்கறி விதைகளை இலவசமாக வழங்கியது.





நீர்வேலி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு விதைவெங்காயம் , மரக்கறி விதைகள், வழங்கப்பட்டது.

### இலவச சட்ட ஆலோசனை சேவை

மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனை வழங்கி வருவதுடன், தேவை ஏற்படின் வழக்குத் தாக்கல் செய்து சட்ட மூலமான தீர்வினை பெற்றுக்கொடுப்பதிலும் ஆர்வமாக செயற்படுகின்றது. இதன் சேவை வீட்டு வன்முறையினால் பாதிக்கப்படும் பெண்களுக்கு ஓர் சிறந்த சேவையாக அமைந்துள்ளது.




### சிறுவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

சிறுவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்றலை ஊக்குவிக்கும் முகமாக பாதிக்கப்பட்ட மாணவர்கட்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் கற்றல் உபகரணங்களை தெரிவு அடிப்படையில் வழங்கி வருகின்றது. இவ்வருடத்தில் புதுக்குடியிருப்பு, மாங்குளம், நெடுந்தீவு பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.



நெடுந்தீவு



**புதுக்குடியிருப்பு**

## சர்வதேச மகளிர் தினம்


ஒவ்வொரு வருடமும் சர்வதேச மகளிர் தினம் சிறந்த முறையில் கொண்டாடப் படுவதில் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆர்வம் காட்டி வருகின்றது. இத்தினத்தில் கொண்டாடுவதற்குரிய கருப்பொருளாக மகளிருக்குரிய சிறந்த தலைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு அதனை மையமாகக் கொண்டு இத்தின நிகழ்வுகள் வடிவமைக்கப் படுகின்றது. இவ்வருடம் மார்ச் 8ம் திகதி தியாகி அறக்கொடை நிலையத்தில் கொண் டாடப்பட்ட மகளிர் தினத்தில் பல கிராமிய அமைப்பு பிரதி நிதிகளை மகளிர் அபிவிருத் தி உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் சறோஜா சிவசந்திரன் எழுதிய **"பெண்கள் உரிமைகள்"** என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நூலை வேலனை பிரதேச செயலர் திருமதி.ச.மஞ்சுளாதேவி வெளியிட்டு வைத்து உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.



திருமதி.ச.மஞ்சுளாதேவி பிரதேச செயலர் - வேலணை வெளியிட்டு வைத்தார்.

## சிறுவஉ தின நிகழ்வு

*2013* ஆம் ஆண்டில் சிறுவர் தின நிகழ்வுகள் இரு பிரதேசங்களில் இடம் பெற்றது. புதுக்குடியிருப்பிலும், நெடுந்தீவு பிரதேச செயலகத்திலும் இச்சிறுவர் தின நிகழ்வுகள் இடம் பெற்றன. புதுக்குடியிருப் பில் நடந்த சிறுவர் தின நிகழ்வில் பெண் பிரதிநிதியாக வடமாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்ட திருமதி.மேரி கமலா அவர் கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித் தார். இந் நிகழ்வில் சிறுவர் அரங்கம், சிறுவர் நாட்டிய நிகழ்வுகள், பாடல்கள் யாவும் அப்பகுதி சிறார்களினால் வடிவமைக்கப் பட்டு அரங்கேற்றப்பட்டனர். நூற்றிற்கு மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றிய இந்நிகழ்வில் சிறுவர்கட்கு கற்றல் உபகரண ங்களும் வழங்கப்பட்டன. இதே போன்று நெடுந்தீவில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுவர்களுக்கான போட்டிகள் வைக்கப் பட்டு அப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப் பட்டது.



**சிறுவர்களின் கலைநிகழ்வு**



**புதுக்குடியிருப்பு**



நெடுந்தீவு

## தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சுடனான செயற்பாடு

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் எமது யாழ் மொழிச் சங்கத்தினூடாக, இனங்களுக்கிடையிலான சமூக ஒருமைப் பட்டு நிகழ்வாக ஒட்டுமடம் "மலரும் மொட்டுக்கள்" சிறுவர் முன்பள்ளிக்கூடத் திற்கு கற்றல் உபகரணம், விளையாட்டு உபகரணம் வழங்கப்பட்டதுடன், பெற் றோர்களின் பங்களிப்புடனான சிரமதான நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு யாழ் மாவட்ட அரச அதிபர் திரு சுந்தரம் அருமைநாயகம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.



முஸ்லீம் தமிழ் சிறுவர் இணைந்த சமூக ஒருமைப்பாட்டு திட்டம் - முன்பள்ளி சிரமதான பணி

## மகளிர் அபிவிருத்தி நிறுவன அலுவலர்கள் பெற்றுக்கொண்ட ஆளுமை பயிற்சிகள்

1. திட்ட முன்மொழிவு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிகள்
   - திட்ட முன்மொழிவு பயிற்சி
   - திட்ட செயற்பாட்டு வரைபு

2. நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி
   - நிறுவன கணக்கியல் முறைமை
   - திட்ட பாதீடு முறைமை

3. தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி

4. சமூக ஒருமைப்பாட்டு செயற்பாடுகள்
   - முரண்பாடும் சட்டமும் பயிற்சி
   - முகாமைத்துவ பயிற்சி
   - சமூக ஊடகங்கள் பயிற்சி
   - வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான பயிற்சி

5. டிப்ளோமா பயிற்சி
   - மனித உரிமைகள் தொடர்பான கற்கை நெறி - UNSCR 1325 தொடர்பான பயிற்சி

நவீன டிசைன்களில் தரமான நகையகம்

# ASOKA JEWELLERS



111, Kasthuriar Road,
Jaffna.
T.P: 021 222 6290

For Modern & Distinctive

